
முரசொலி



"வா பகையே!" என்று அழைக்கும் வகையில் அசைந்தாடிப் பறக்கும் இரு வண்ணக் கொடிகள் கொண்ட முகப்பு வாயில்!



மாயவரம் தோழர்களால் தென்னங்கீற்றுகளை வைத்து திறம்பட செய்து முடிக்கப்பட்ட இரண்டாவது அலங்கார முகப்பு!

## ★ பார்த்து பரவசப்படுவோர்! ★

★ "திராவிட முன்னேற்றக் கழகத்தின் 2-வது மாநில மாநாடு திருச்சி வள்ளுவர் நகரில் இன்று காலை தொடங்கியது. திருச்சி காவேரிப் பாலத்திலிருந்து இன்று காலை சுமார் ஒரு மைல் நீளமுள்ள ஒரு ஊர்வலம் புறப்பட்டது."

★★ "நாஞ்சில்நாடு, திருவனந்தபுரம், சித்தூர், பெங்களூர் பம்பாய், இலங்கை ஆகிய இடங்களிலிருந்து :00க்கும் மேற்பட்ட தி. மு. கழகத்தினர் கொடிகளுடன் வந்து இம்மாநாட்டில் கலந்து கொண்டனர்."

"அழகுக்கு அழகு செய்ததுபோல் மாநாட்டுப்பந்தலே ஒரு கண் காட்சியாக அமைந்திருந்தது. திரைப்பட நடிகர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் மேற்பார்வையில் தயாரிக்கப் பட்டுள்ள அலங்கார முன் வாயில் அரண்மனைக் கோட்டை வாயிலைப்போல் பீடுடன் அமைக்கப்பட்டிருந்தது. உள்ளே சென்றதும் வானுற ஓங்கி வளர்ந்த ஒரு கம்பத்தில் தி. மு. கழகத்தின் இரு வண்ணக் கொடி பட்டொளி வீசிப் பறந்தது. அதன் இரு மருங்கிலும் சிங்கங்கள் கம்பீரமாக நின்றன. அவற்றிற்குச் சற்று தூரத்தில் புத்தர் சிலையும், வள்ளுவர் படமும் வனப்புடன் வைக்கப்பட்டிருந்தன."

"எல்லாவற்றையும் விட ஈடு இணை இல்லாதிருப்பது பந்தலின் முகப்புத்தான். எப்படித்தான் அப்படி தென்னங்கீற்றுகளால் அலங்கார முகப்பு அமைத்தார்களோ என்று எண்ணும்படியாக அவ்வளவு வேலைப்பாடு நிறைந்ததாக இருந்தது."

★★★ "**சென்னை மாநிலத்திலேயே இதுவரை எங்குமே போடப்படாத மிகப்பெரும் அளவில் மாநாட்டுப் பந்தல் போடப் பட்டிருந்தது.** அத்தனையும் மூங்கிலும், மூங்கில் தென்னந் தட்டிகளும் தான். மாநாட்டுக்கு மூன்று இலட்சம் மக்கள் வருவார்கள் என்று மதிப்பிட்டு அவர்கள் அனைவரும் மாநாட்டுப் பந்தலிலேயே வசதியாகத் துயில வேண்டுமென்ற எண்ணத்துடன் பந்தல் அமைக்கப்பட்டிருந்த தென்றால் அதன் பரப்பளவை நீங்களே கணக்கிட்டுப் பார்த்துக் கொள்ளுங்கள். நாடகங்கள் நடத்துவதற்கென திறந்த வெளி அரங்கமொன்றும் மாநாட்டுப் பந்தலுக்குப் பின்புறம் அமைக்கப் பட்டிருந்தது."

★★★★ "மாநாடு நடைபெற்ற இடம் முன்னர் தலைமை அமைச்சர் நேரு திருச்சிக்கு வந்த பொழுது, அவர் முகவில் பேச ஏற்பாடு செய்யப்பட்டு, பின்னர் தண்ணீர் கிடைக்காது என்று கைவிடப்பட்ட இடமாகும். அப்படிப்பட்ட இடத்தில் சிறிது கூடத் தண்ணீர்த் தட்டுப்பாடு ஏற்படாத வகையில் ஏற்பாடுகள் செய்யப் பட்டிருந்தன."

—தமிழ் நாடு' 18, 22—5—56

## ★ பார்த்து பதைபதைப்போர்! ★

❋

### " கண்ணீர்த் துளிக் கட்சி மாண்டது "

"அன்பர்கள் சிலர் கோபிக்கலாம். ஆம்! சமுதாய, மதப் புரட்சி இயக்கமென்று கூறிக் கொண்டிருந்த கண்ணீர்த் துளிக் கட்சி ஒரு அரசியல் கட்சியாகி விட்டதால் 'மாண்டது' எனச் சொல்லுகின்றேன்."

"இனிமேல் 'திராவிட' என்ற சொல்லையும் விட்டு விட்டு இக்கழகம் பெயர் வைத்துக் கொள்வது தான் சரியானது. பார்ப்பனர்களையும் இக்கழகம் உறுப்பினராகச் சேர்த்துக் கொள்வதால் இது அவசியமாகும்."

"இந்தக் கழகம் தங்கள் கொள்கைகளையும் மாற்றிக் கொள்ள வேண்டும். சட்ட சபைக்குச் சென்றால் இந்திய ஆட்சிக்குப் பிரமாணம் செய்து, இந்தியக் கொடிக்கும் அரசாங்கத்துக்கும் துரோகம் செய்வது திராவிடனுக்கு அழகல்லவே!"

"ஒரு சமயம் வெற்றி கொண்டு சட்டசபைக்குச் செல்லும் 'முற்போக்கு' நண்பர்கள் மாணிக்கவேலர்களாகவும், இராமசாமிப் படையாட்சியாராகவும் மாறலாம்; மாறினால் இவர்கள் கழகம் அவர்களை ஒன்றும் செய்ய முடியாது."

"இக்கழகத்தின் எதிர்கால சரித்திரத்தை திராவிடர்கள் நன்கு கவனிப்பர்."

இப்படிக்கு,
**பேசும் பிணம்**

★ ★ ★

# மாநில மாநாடு

வரவு:

# ரூ. 1,10,000

**நுழைவுக் கட்டணத் தொகை.**

# தலையங்கம்

ஆண்ட இனத்தால் மீண்டும் முற்றுகை;
மாண்டிடும் புழுவே மகுடம் கழற்று!

சென்னை 25--5--56 வெள்ளி

## அவர்கள் நிபந்தனை!

மூச்சை நிறுத்தி விடு; உனக்கு மகுடம் புனைவிக்கிறேன்—என்று நிபந்தனை விதிப்பதிலே எவ்வளவு விவேகம் இருக்க முடியுமோ;

நாக்கை வெட்டி எறி; உன்னை நானிலம் புகழும் பேச்சாளனாக்குகிறேன் — என்று புகல்வதிலே எவ்வளவு புத்திசாலித்தனம் ஒட்டிக்கொண்டிருக்க முடியுமோ;

மூக்கை அறுத்துவிடு; உனக்கு மனோரஞ்சித மலரைப் பரிசளிக்கிறேன்—என்று ஆசை காட்டுவதிலே எவ்வளவு விசால ஞானம் புதைந்திருக்க முடியுமோ;

அவ்வளவு விவேகமும், விசித்திரமும் கம்யூனிஸ்டுகள் 'திராவிட நாட்டுப் பிரச்சனையை விட்டுவிடுங்கள்; தேர்தல் களத்திலே உங்களோடு சேர்ந்து கூட்டணி அமைக்கிறோம்' என்று திராவிட முன்னேற்றக் கழகத்தை நோக்கி விடுத்திருந்த அறிக்கையிலே அடங்கியிருக்கிறது என்பதை தமிழகத்து மக்கள் தெரிந்து கொண்டார்கள். அது மட்டுமல்ல; கம்யூனிஸ்டுகளின் விசால நோக்கத்தை நினைத்து நினைத்து விலா நோகச் சிரிக்கவும் ஆரம்பித்துவிட்டார்கள்.

பாவம்! நாம் என்னவோ கம்யூனிஸ்டுகளோடு கூட்டணி அமைக்க கடுந்தவம் இயற்றிக் கொண்டிருப்பதைப் போலவும்; அதற்கு அவர்களின் இசைவைக் கேட்டதும் திருச்சி மாநாட்டிலேயே, "நாங்கள் திராவிட நாட்டுப் பிரச்சினையைக் கைகழுவி விட்டோம்" என்று அவசர அவசரமாகத் தீர்மானம் போட்டு, அவர்களோடு கொஞ்சிக் குலாவத் தயாராகி விடுவோமென்றும் நினைத்த கம்யூனிஸ்டுகள் ஏமாந்தார்கள்! ஏமாந்தார்கள்! 'இனியொரு ஏமாற்றம் இப்படி ஏற்பட்டால் மானத்தோடு உயிர் வாழ முடியாது'—என்று எண்ணி யெண்ணி ஏங்குகிற அளவுக்கு ஏமாந்தார்கள்!

திராவிடநாட்டுப் பிரச்சினைத் திட்டத்தை விட்டுவிட வேண்டுமோம்—பாலக்காட்டிலே நிபந்தனை ஏதுமின்றி காங்கிரசின் காலடியிலே சரணாகதி அடைந்தவர்கள், நம்மை நோக்கி நிபந்தனையைப் போட்டிருக்கிறார்கள்!

அந்த நிபந்தனையை—அன்பழைப்பு என்ற பெயரிலே நம்மை நோக்கி நீட்டப்பட்ட ஆட்காட்டி விரலை—சிறு தூசியென மதித்து, கொள்கையை விற்கும் அரசியல் வேசியாக மாறமாட்டோம். சிரசு வெடித்திடினும் வீசிடுவோம் வாளை எனக் கூவி இலட்சியபுரி நோக்கி முன்னிலும் வேகமாய்ப் பீடு நடை போட்டு வருகிறோம்!

இதைப் புரிந்து கொள்ள முடியாமல் பேசி விட்டார்கள் கம்யூனிஸ்டுகள்! ஒரு சமயம் 'தன்னைப்போல் பிறரையும் நேசி' என்னும் பொன்மொழிக்கேற்ப, தங்களைப்போலவே வளைந்து கொடுத்து, கொள்கையை வளைத்துக் கொடுக்கும் பண்பினராய் நம்மையும் நினைத்து விட்டார்களோ?—என்று கருதிட வேண்டியிருக்கிறது, நாம்!

அவர்களுக்கெல்லாம் ஒன்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறோம்—

அன்புள்ள கம்யூனிஸ்ட் கட்சித் தோழர்களே! திராவிட நாடு வேண்டாமென்று சொல்லிவிட்டால் தி. மு. கழகம் உங்களோடு கூட்டணி அமைக்கத் தேவையில்லை; எதிர்க் கட்சியாக இயங்கவேண்டிய அவசியமும் இருக்காது. ஆமாம், தோழர்களே! ஏக பாரதக் கொள்கையை ஒப்புக்கொண்டால் உடனடியாக திராவிட முன்னேற்றக் கழகம் ஆளும் கட்சியாக இருக்கும்; வாளும் கேடயமுமாய் இலட்சியப் போராட்டம் நடத்திக் கொண்டிருக்கும் எங்கள் தோழர்கள் 'கனம்'களாக இருப்பார்கள்.

அப்போது எங்கள் கழகம் கூட்டணி அமைக்காது; மந்திரி சபை அமைக்கும்.

ஆணி வேரை அறுத்துக் கொடுக்கும்படி ஆலமரத்தைப் பார்த்துக்கேட்கும் கம்யூனிஸ்டுகளே! நீங்கள் அணிந்திருக்கும் மாஸ்கோ கண்ணாடியைக் கழற்றி விட்டுப் பாருங்கள். உண்மை உதய சூரியனைப் போல் புலப்படும்! ★

17—5—56 அன்று மாநாட்டின் முதல் நாள் நிகழ்ச்சியாக பொதுச் செயலாளர் திருச்சியின் முக்கிய தெருக்களின் வழியே நகர்வலம் வந்த காட்சி!



(1) ஊர்வலத்தில் கலந்துகொண்ட பம்பாய்த் தோழர்கள். (2—3) பொதுச் செயலாளர், மற்றும் தோழர்கள் அம்பில், பண்ணை முத்துகிருஷ்ணன், துணைப் பொதுச் செயலாளர், மாநாட்டுத் திறப்பாளர் ஜி. பி. சோமசுந்தரம், கருணாநிதி, மதியழகன் ஆகியோர். (4) ஊர்வலம் மாநாட்டுப் பந்தலுக்குள் நுழைகிறது. துணைப் பொதுச் செயலாளருடன் மதியழகன், நாகசுந்தரம், முல்லை சத்தி ஆகியோர்.

# காமராசரே, ★ கண்ணியம் பெறுவீர்! ★

"இவர்களுக்கு யார் ஓட்டுப் போடுவோர்கள்?"—கேட்டிருக்கிறார் காமராசர், குடியாத்தம் தேர்தலிலே பெரியார் ராமசாமியை உதவிக்கழைத்தவர்; சென்ற நகரசபைத் தேர்தலின் போது நேருவை ஊர்வலம் அழைத்துவர நேர்ந்ததையும் மக்கள் மறந்து விடுவார்கள் என்ற நினைப்பில்!

சொந்த பலத்தை நம்பி தேர்தலில் நிற்க முடியாதவர்—ஆசிய ஜோதியை சுவரொட்டிகளில் காட்டுவதால் மட்டும் மக்களை மயக்கிவிட முடியாது, அவரை நேரிலும் அழைத்து வந்தால் தான் முடியும் என்கிற நிலைமைக்கு ஆளாகி யிருப்பவர்—அவர்தான் பழித்துரைக்கிறார், திருச்சியிலே கூடிய மக்கள் கொடுத்த தீர்ப்பை!

"வெறும் வயிற்றுப் பிழைப்புக்காகக் கட்சி சேர்த்துக் கொண்டு வீண் பிரச்சினைகளை எழுப்புகிறார்கள். இந்தக் கட்சிகளுக்குப் பொது மக்கள் ஆதரவுதரக்கூடாது; ஜாக்கிரதையாக இருங்கள்!"
—இதுவும் அவரது வாசகம் தான்!

எதிரிகள் கோடி யிட்டழைத்த போதும், பட்டங்களையும் பதவிகளையும் மலையெனக் குவித்து, 'வா! வா!' என்று அழைத்த போதும், கொள்கையிலிருந்து எள் முனையும் பிறழாத எஃகு உள்ளங்களைப் பார்த்து வயிற்றுப் பிழைப்பு இயக்கமென்கிறார், விருதுநகரத்து வீரப்புலி!

'சிறைக் கூடமா? பூந்தோட்டமா? இரண்டுக்கும் வித்தியாசமில்லை' என்று கழறிடும் காளையர்—

ஆறு மாதமா? ஆறு வருஷமா? எதற்கும் அஞ்சோம்; இடிகேட்ட நாகம் போலத் தொடை நடுங்கோம்—எனத் தோகை மயிலாம் தேம்பியழுதிடும் குடும்ப விளக்கைப் பற்றிக் கவலைப் படாமல், திரும்பி வருவாயா; அன்றித் தாலமுத்து நடராசன் கதிதான் உனக்குமா?-என்று கண்ணீர் விட்டுக் கதறிடும் வீட்டாரின் அழுகுரலையும் துச்சமென மதித்து, இரும்பு விலங்கினுள்ளே இரு கரங்களையும் நுழைத்திடும் ஏந்தலார்கள்—

—இவர்கள் எல்லோரையும் பார்த்துத்தான் எள்ளி நகையாடி யிருக்கிறார், எல்லாம் தெரிந்தவர்கள் அமர வேண்டிய பீடத்திலே இருக்கும் இந்த பீஷ்மாச்சாரியார்!

வயிற்றுப் பிழைப்புக்காக கட்சி நடத்துகிறார்களாம்!—கண்யம் வாய்ந்த பதவி வகிப்பவர் ஒரு எதிர்க் கட்சியைப் பார்த்து இப்படி ஈனத்தனமாகப் பேசி யிருக்கிறார்!

இரத்தம் இரத்தமாக வாந்தியெடுத்து, அழுக்கேறி யிருக்கும் திருவிடத்தைச் சுத்தப் படுத்தும் முயற்சியிலேகண்ணை மூடினானே 'அஞ்சா நெஞ்சன் அழகிரி, அவனுடைய சந்ததியாரைப் பார்த்துக் கேட்கிறார், நீங்கள் வயிற்றுப் பிழைப்புக்காகக் கட்சி நடத்துகிறீர்கள் என்று!

'ஏனப்பா நம் சிற்றப்பாவுக்கு சந்ததியில்லை?' என்று கேள்வி பிறக்க, 'அவர் ஆண்குறி ஆணவத் தலைவர் ஆச்சாரியார் பட்டாளம் வீசிய துப்பாக்கி ரவையிலே சிதைக்கப்பட்டதடா, என் செல்வமே!' என்று வருங்காலத்தவர் தேம்பியழும் நிலையிலே அடக்கு முறைக் கணைகள் பலவற்றை மார்பிலே தாங்கிக் கொண்டிருக்கும் இயக்கத்தைப்பார்த்துத் தான் அந்தத் தகாப் பதத்தை வீசியிருக்கிறார் தடித்த நாவுக்கு உரிமையாளராம், காமராசர்!

ஓய்வு பெற விரும்பியவர்களை ஒதுங்கி யிருக்கச் சொல்லி விட்டு, சாய்வு நாற்காலியிலே சாய்ந்து கிடக்க நினைத்த ஜரிகைக் குல்லாய்களை — ராஜ கோலாகலர்களை-சற்றே விலகியிரும் பிள்ளாய் எனத் தூக்கியெறிந்து விட்டு முழுக்க முழுக்க ஏழையர் இயக்கமாய்ப் பரிமளிக்கும் திராவிட முன்னேற்றக் கழகம் அவருக்கு வயிற்றுப் பிழைப்புக் கட்சியாகக் காட்சி தருகிறது.

அய்யோ — அன்னையே! உன்னை மீட்க நினைப்பவர்கள் என்னென்ன அற்பமொழிகளை, அற்ப இடத்திலிருந்தெல்லாம் கேட்க வேண்டியிருக்கிறது, பார்! நீ பெற்ற குமாரர்கள் வயிற்றுப் பிழைப்பு இயக்கம் நடத்துகிறார்களாம்! அய்யோ! கட்சி நடத்தித்தான் வயிறு வளர்க்க வேண்டுமென்றால், தாயே, நாங்கள் உன்னை அந்த ஏகாதிபத்யப் பித்தர்களிடமிருந்து மீட்பதற்காகவா போராடிக்கொண்டிருப்போம்? இல்லையே! மூவர்ணக் கொடியேந்தி மூளையை டில்லிக்கு அடகு வைத்திடும் காமராசர்களாக அல்லவோ இருந்திருப்போம்!

நாவரள, தொண்டையிலே நடுக்கம் பிறக்க நாளெல்லாம் கதறிக்கொண்டிருக்கும் பேச்சாளர்களாக இருக்க மாட்டோமே; எப்போதாவது ஒரு முறை வாயசைத்துவிட்டு, ஆயிரக் கணக்கில் வாரிச்சுருட்டிக்கொள்ளும் முதல் மந்திரிகளாக அல்லவோ இருந்திருப்போம்!

அரசியற் கைதிகளாக கேப்பைக் கூழையும், கீரைத்தண்டுக் குழம்பையும் சாப்பிட்டு, வயிற்று வலியையும் வாந்தி பேதியையும் உரிமையாக்கிக் கொண்டிருக்க மாட்டோமே; வயிற்றுப் பிழைப்புக்கு மதிப்பளித்திருந்தோமானால் இந்நேரம், 'பாரத மாதாவுக்கு ஜே' போட்டு ஊட்டியில் அல்லவா உல்லாச வாசம் இருப்போம்!

— இப்படித்தான் கதற வேண்டியிருக்கிறது காமராசரது கடைசித்தரமான பேச்சை நினைக்கும்போது! (மா)

★



மாநாட்டுக்கு முன்தினம் திருச்சி நகரசபை பொதுச்செயலாளர் நெடுஞ்செழியனுக்கு மகத்தான வரவேற்பொன்றை அளித்தது.




அன்புள்ள
பொன்முடி,

நீ மலேயாவிலே; நான் மாநாட்டுப் பந்தலிலே! மார்பிலே அரும்பிடும் வியர்வைத் துளிகளை வழித்தெறிந்துவிட்டு, வதைபடுவதற்கென்றே பிறந்த தமிழினமே! யாம் படும் அவதியைக் காண முடியாத அளவிற்கு உன் கண்ணிலே சதையா வளர்ந்திருக்கிறது? — என்று கொக்கரிக்கும் வேதனைக் குரலோடு நீ! மடைதிறந்த வெள்ளம் போல் விடுதலைப் படை திரட்டியிருக்கும் வள்ளுவர் நகரிலே நான்!

தாயைப் பிரிந்திருக்கும் சேயாக நீ! தென்னகத்திலே காயாக இருக்கும் விடுதலை உணர்வை பழுக்க வைக்கும் பண்பாளர்களிடையே நான்!

ஆனால் உண்மையிலேயே கூறுகிறேன் நண்பனே; தாயைப் பிரிந்த கவலைகூட உன்னை அவ்வளவு வாட்டியிருக்காது. வள்ளுவர் நகருக்கு வந்து, தென்றல் வரும் சந்தனப் பொய்கைமேல் அருவிபோல் தேன் நிகர் உரிமைச் சிந்து பாட வரிந்துகட்டி நிற்கும் வீரர்களைப் பார்க்க முடியவில்லையே; தோள்கள் தினவெடுக்கும் விதத்தில் வெம்பகை முடிக்க அவர்கள் எடுத்துக்கொண்ட வஞ்சினத்தைக் கேட்க முடியவில்லையே—என்பது உன் உயிர் வாட்டும் நோயாக இருந்திருக்கும் என்பதை நானறிவேன். காரணம் உன்னைப்போன்ற பிழைப்புக்காக நாடு கடத்தப்பட்ட திராவிடத் தோழர்கள் அனுப்பியிருந்த ஆயிரக்கணக்கான வாழ்த்துக்கள் வள்ளுவர் நகரில் மலையெனக் குவிக்கப்பட்டிருந்ததையெல்லாம் நான் என் இரு கண்களாலும் கண்டேன்.

அன்புள்ள தோழனே! சென்ற கிழமை உனக்கு எழுதியிருந்தேன்—மே 16-ம் நாளன்று பகை மிரட்டும் உருவோடும், படை திரட்டும் பாங்கோடும் பொதுச் செயலாளர் அவர்கள் புகைவண்டி நிலையத்திலிருந்து புறப்பட்ட ஊர்வலக் காட்சியை! இதோ தொடர்கிறேன் — தொடர் கதையாகியிருக்கும் நம் விடுதலைக் காதை புதிய அத்தியாயம் புகுந்த புதுக்கதையை தொடர்ந்து சொல்லுகிறேன்.

வீரன் சேரன் செங்குட்டுவனுடைய படையைப் பற்றி பதிற்றுப் பத்து' கூறும் விதத்தை அதற்கு முன்பே சிறிது சொல்லிக் கொள்ளுகிறேன்.

எண்ணிறந்த ஆட்களையுடைய தூசிப்படையினரை வெள்ளமாகவும் பகை மன்னரின் குடை


மாநாட்டு அலங்கார முகப்பைக் கடந்ததும் நம் எல்லோரையும் வரவேற்ற வள்ளுவர்—புத்தர் திருவுருவங்கள்!

முறிப்பதையே தொழிலாகக் கொண்ட யானைப்படைகளை அலைகளாகவும், யானைப் படையின் மேலே வில்லேந்திய வீரர்தாமேந்திய வில்லின் தலை தோன்ற மேம்பட்டு வருவதை அலைமேல் தோன்றும் நீர்த் திவலைகளாகவும், கேடயத்தினுள்ளே காம்பு மறைக்கப்பட்டு பளபளக்கும் அலகை மட்டும் நீட்டிக் கொண்டிருக்கும் வேல்களை மீன்களாகவும் போர்ப் பறையோடு கலந் தொலிக்கும் முரசொலியை முழக்கமாகவும் கொண்டு சேரன் படையென்னும் பெருங்கடல் நடந்து சென்று, எதிரிகளை வென்று, அவர்களது சினத் தீயை அழித்தொழித்ததாகக் கூறுகிறார், புலவர் பெருமான்!

சேரன் செங்குட்டுவனது படைகள் மலைபிடித்தும் கடலிடத்தும் பிறவிடத்துமுள்ளனவாகிய பேரரண்களை நிர்மூலம் செய்யும் பெருங்கடலாம்!

ஆமாம் நண்ப! 17—5—56 புதன்கிழமையன்று திருச்சி சிந்தாமணியிலிருந்து தலைவர் நெடுஞ்செழியனை திராவிட முன்னேற்றக் கழகத் தானை, ஊர்வலமாக அழைத்துச் சென்ற காட்சி சேரன் செங்குட்டுவனது கடல் போன்ற சேனையையும் தோற்கடிப்பது போலத்தானிருந்தது!

ஒவ்வொரு மாவட்டச் செயலாளர்களும் அவரவர்கள் அணிக்குத் தலைமை வகித்தார்கள். ஒவ்வொரு கிளைக் கழகமும் தங்களுடைய பெயர் பொறிக்கப்பட்ட தி. மு. க. கொடிகளைக் கையிலேந்திக்கொண்டு ஆர்ப்பரிக்கும் கடல் போலத் தான் திருச்சித் தெருக்களை வலம் வந்தனர்.

நம்மிடம் வேழப் படைகள் இல்லையே தவிர, வேழத்துக்கும் இல்லாத நெஞ்சுறுதி நமக்குண்டு என்பதை யார் மறுக்க முடியும்? எதிரிகளின்மீது எறிவதற்கு வேல் கிடையாதே ஒழிய, கைகளிலே பற்றியிருந்த கொடிக் கம்புகளை வேல் பாய்ச்சும் பாங்கிலே நம் தோழர்கள் வீசி வந்ததைப் பார்த்தால்தான் உனக்குப் புரியும். ஆமாம் தோழனே; அந்தக் காட்சி அத்தகைய உருக்கமிக்கதாய் இருந்தது!

ஊர்வலம் வள்ளுவர் நகர் வந்ததும் காரிலிருந்து இறங்கிய பொதுச் செயலாளரை வரவேற்புக் குழுத் தலைவர் அம்பில் தர்மலிங்கமும், செயலாளர்கள் மணி, முத்து ஆகியோர் கொடிக் கம்பத்தினருகில் அழைத்து வந்தனர். பின் அறிஞர் அண்ணா அவர்கள் நாவலர் கையில் கொடி எடுத்துக் கொடுக்க அதை ஐம்பதடி உயரக் கம்பத்தில் பொதுச் செயலாளர் ஏற்றிவைத்த மாட்சியைப் பார்த்தோரெல்லாம் கண்ணீர் விட்டனர்—பொங்கிவரும் ஆனந்தத்துக்கு அணைபோட முடியாத காரணத்தால்!

ஐம்பதடிக் கம்பம் — அதன்மீது இருவண்ணக் கொடி! இந்நிலை மாறி, சென்னை கடற்கரையை எதிர்நோக்கி நிற்கும் ஜார்ஜ் கோட்டையின் கொடிக் கம்பத்தில் நம் இலட்சியக் கொடி பட்டொளி வீசிப் பறக்கவேண்டிய காலம் வராமலா போகப்போகிறது!

வந்துதான் தீரும்! நண்ப; —காலம் மாறும் என்னும் கவின்மிகு பேருரை என் கருத்தைக் கவர்ந்தது.

தி. மு. க. மாணவர் கிளையைச் சார்ந்தோர் ஏற்பாடு செய்திருந்த கண்காட்சி மாநாட்டுக்கு வந்திருந்தோரின் கருத்தையும், கவனத்தையும் கவர்ந்தது!

தென்னகத்துத் தலைவர் ஜனநாயகத்திற்கு இலக்கணம் வகுக்கிறார்.

ஆமாம்; காலம் மாறித்தான் ஆகவேண்டும்—என்பதைச் சுட்டிக் காட்டுகிற வகையில், பிற நாட்டு விடுதலை வீரர்களின் பொன்மொழிகள் பொறித்த வீரத் திருவுருவங்கள் கொண்ட கண்காட்சி சாலையை துணைப் பொதுச் செயலாளர் என்.வி. நடராசன் அவர்கள் திறந்துவைத்துக் கொண்டிருந்தார். இது மாலை நிகழ்ச்சியின் முதல் கட்டம் !

இந்தக் கண்காட்சியில் ஒரு பகுதியான விஞ்ஞானக் காட்சி வந்திருந்தோரையெல்லாம் வியப்பிலாழ்த்தியதை நீ நேரில் வந்திருந்தால்தான் தெரிந்து கொண்டிருக்க முடியும். இதற்கு ஏற்பாடு செய்திருந்த திராவிட முன்னேற்றக்கழக மாணவர் கிளையைச் சேர்ந்தவர்கள் உண்மையிலேயே மக்களிட மிருந்து 'சபாஷ்' பெற்றனர் ! அவ்வளவு அருமையாக இருந்தது, அந்த அமைப்பு !

பின் நடிப்பிசைப் புலவர் கே. ஆர், ராமசாமி அவர்களின் தேமதுரப் பாசுரங்கள் பந்தலில் திரண்டோருக்குத் திகட்டாத விருந்தளிக்க, கலைவாணர் என். எஸ், கே. அவர்கள் 'புத்தர் வரலாறு' என்னும் வில்லுப்பாட்டினால் பழமையைச் சாடிக் காட்டினார்.

இன்னொன்று கூற மறந்து விட்டேனே ; மாநாட்டுப் பந்தல் அமைந்திருக்கும் திடலிலே முன்னம் பாம்புகளும், விஷப்பூச்சிகளும் நெளிந்து கொண்டிருந்தனவாம் !

அவைகளை அழித்து விட்டுத்தான் வள்ளுவர் நகரை அமைத்திருக்கிறார்கள் நம் பாசறை வீரர்கள் !

—அந்த முயற்சியில் பழுதேற்பட்டு, மீண்டும் பாம்புகள் படையெடுத்து விடுமோ என்ற பயம் எல்லோரையும் பற்றிக் கொள்ள ஆரம்பித்தது. ஆமாம், தோழா! திருவாவடுதுறை ராஜரத்தினம் நாதசுர இசை வழங்குகிறாரென்றால் பாம்புகள் துறவு பூண்டு புற்றை விட்டு வெளி வருவதிலே ஆச்சரியம் என்ன இருக்கிறது ! தேனைக் குழைத்துக் கொடுத்தார் அந்த நாயன உலகின் நாயகர் !

அடுத்ததாக அறிஞர் அண்ணா அவர்கள் மூவலூர் மூதாட்டியார் இராமாமிர்தத் தம்மையார் அவர்களுக்கு விருது தொன்றினை வழங்கினார்.

"கனிந்து முதிர்ந்த கனியாக இருக்கும் மூதாட்டியார், அன்னி பெஸண்ட் அம்மையார் அரசியலில் ஈடுபட்ட காலத்தில் இருந்த முதிர்ச்சியைப் பெற்றிருக்கிறார்கள். ஆனால் அந்த அன்னி பெசன்ட் அம்மையாருக்குக் கைலாகு தர, கார் தந்துதவ, கலெக்டர்களும், கவர்னர்களுமிருந்தார்கள். ஆனால் அம்மையாரே ; உங்களுக்கு நாங்கள்தான் இருக்கிறோம்!"

—என்பதாகக் கூறி மூதாட்டியாருக்குப் பல்லாண்டு கூறினார் பல்லவம்தந்த சிங்கம் !

அன்றிரவு இலட்சிய நடிகர் ராசேந்திரன் தந்த 'புதுவெள்ளம்' நாடகத்துடன் மாநாட்டு நிகழ்ச்சிகள் முடிவடைந்தன !

மறு நாள் வெள்ளிக்கிழமை—இசை முரசு அனிபா, இசைச் செல்வி கஸ்தூரி ஆகியோரின் பாட்டோடு மாநாடு துவக்கம் பெற்றது.

சேலத்துக் கிழவர் ஜி. பி. சோமசுந்தரம் வீரத்துக்கோர் எடுத்துக்காட்டாய் விளங்கும் வகையில் தனது வரவேற்புப் பேருரையை ஆற்றினார்.

தோழர் அம்பில் தர்மலிங்கம், பொறுத்தது போதும்; பொங்கி எழு திராவிடனே! என்னும் விதத்தில், சொற்களால் கூடியிருந்த மக்களுக்குக் கைலாகு கொடுத்து, வளர்ந்தோங்கியிருக்கும் தருக்களாய் நிற்கும் இன உணர்ச்சியற்றோருக்குப் பேரிடியைத் தந்து தன்னுடைய சிறப்பான வரவேற்புரையைத் தந்தார்.

அன்றைய பிற்பகல் நிகழ்ச்சியாக தோழர் தென்காசி முத்துசாமியும், இசைக்குயில் பி. எஸ். செல்வாவும் விடுதலைக் கீதங்களைப் பாடி கேட்டோரின் நரம்புகளையெல்லாம் முறுக்கேற்றினார்கள்.

அடுத்தடுத்த நிகழ்ச்சிகளாக தலைவரை முன் மொழிதல்; வழி மொழிதல் பிறகு தலைவரின்முன்னுரை போன்றவைகள் வகுக்கப் பட்டிருந்தன,

ஆனால் அவை ஒழுங்குற நடக்க முடியவில்லை புதுவெள்ளம் புகுந்துவிட்டது. இலட்சிய நடிகரது நாடகமா-என்று கேட்டு விடாதே, நண்பனே; மழை! கோடை மழை !!

நமக்கெல்லாம் அன்பழைப்பு அனுப்பிய அம்பிலார் கருமேகக் கூட்டத்துக்கும் அழைப்பனுப்பி விட்டாரோ, என்னவோ; காமராசரைப் போல உறுமிக்கொண்டு, ஆச்சாரியாரது அடக்குமுறைக்

★ தொடர்ச்சி 11-ம் பக்கம்



மாநாட்டிற்கு மோட்டார் மன்னர் திரு. ஜி. டி. நாயுடுவும் வந்திருந்தார். பக்கத்தில் பொதுச்செயலாளரும், நடிப்பிசைப் புலவரும்

மூதாட்டியாரும், மு. க. வும்.



யானை வரும் பின்னே — மணி ஓசை வரும் முன்னே !

## ✷ கதையல்ல ; வரலாறு ✷

# பூதப் பெண்

**பி. சி. கணேசன்.**
பி. எஸ்ஸி;பி.டி.

[காலம்: பனிரெண்டாம் நூற்றுண்டு
இடம் ஸ்பெயின் நாடு.]

“வாள்களின் வீர ஒலி முழங்கிய காஸ்டில் நாட்டில் வளையல்களின் ஒலி! அல்பான்ஸோ மன்னனின் உள்ளம் இப்படிப் பேதலித்து விடும் என்று நான் எண்ணவேயில்லை...”

“என் செய்வது லாரா, களத்தில் வீர கீதம் இசைத்தவர், இப்படிக் கட்டிலில் காதல் கீதம் இசைத்துக் கிடப்பார், நாட்டின் காரியங்களில் கவனம் செலுத்த மாட்டார் என்று யார்தான் எதிர்பார்த்திருக்க முடியும்? மன்னரின் போக்கு விசித்திரமாகத்தான் இருக்கிறது.”

“விசித்திரமல்ல கிரேஷியா, வேதனை! மூர்க்கர்களின் மூர்க்கத்தனத்தை முறியடிக்க அவர்களிடத்தில் காட்டிய வீரம்...அப்பப்பா... இப்பொழுது நினைத்தால்கூடநெஞ்சு பகீரென்கிறது. அந்த யூதப் பெண்ணிடம் அப்படி யென்ன கண்டு விட்டார்—நாட்டின் கடமைகளை மறக்கும் அளவுக்கு?”

“அதுதான் தவறு லாரா அவள் ஓர் ஒப்புயர்வற்ற அழகி. கண்ணுல் கதைகள் பேசுகிருள். புன்னகையால் போதை யூட்டுகிருள். மன்னனின் போக்கு அறிந்து பக்குவமாக நடக்கிருள். வீரத்துக்கு மாலையிட்டு மகிழ்ந்த மன்னன், அந்த சேல் விழியாளின் அழகில் சொக்கி, சிந்தை குலைந்து நிற்கிருர். ஆனல்...நாம் நினைப்பது போல் அவள் வஞ்சகியல்ல!”

லாரா ஒரு ஏளனச் சிரிப்புச் சிரித்தான். “கிரேஷியா, நீர் ஒரு அப்பாவி..;அவள் வஞ்சகியல்லவா? அந்த யூதப் பெண்ணின் போதையில் சிக்கிய பிறகுதான், மன்னனுடைய ஆட்சியில் யூதர்களின் ஆதிக்கம் வலுத்து விட்டது. கிறிஸ்தவர்கள் கேலிப் பொருள்களாகி விட்டனர். லாரா, வரலாற்றினை மறந்து விடாதீர். அந்த இனம் வாள் பிடித்து வையத்தை வீழ்த்தியதில்லை. தன் இனம் வாழ அறிவை விபச்சாரம் செய்யும்.ஆரணங்குகளை மாற்றுனின் அந்தப்புரத்துக்கு அனுப்பி வலை வீசும். அந்த யூத இனத்தின் வெற்றிக்குக் காரணம் தெரியுமா உனக்கு? அங்குள்ள ஆண்களுக்கு மானம் இல்லை; பெண்களுக்கு நாணம் இல்லை !...நமக்குள் ஒற்றுமையில்லை.”

கிரேஷியா சிந்தனையில் ஆழ்ந்தான்.

“சிந்தித்துப் பார் கிரேஷியா, அந்த யூதப் பெண் ரஷேலின் பிடியிலிருந்து நாடு விடுபட்டாலொழியக் கிறிஸ்தவர்களுக்கு விமோசனம் இல்லை. அவளுடைய பிடியிலிருந்து மன்னன் அல்பான்ஸோவை விடுவிப்பதும் எளிதான காரியமாகப் படவில்லை...”

“பின் உம்முடைய திட்டம்தான் என்ன?” கிரேஷியா கவலையோடு கேட்டான்.

“நாட்டில் யூதரின் ஆதிக்கத்தை எதிர்த்து ஒரு புரட்சி...”

“அல்பான்ஸோ மன்னருக்கு எதிராகவா? ரஷேலின் ஆதிக்கம் ஒழிய வேண்டியதுதான், ஆனல் நம்முடைய அன்புக்குப் பாத்திரமான மன்னரை எதிர்த்துக்கிளர்ச்சி செய்வதை நான் விரும்பவில்லை.”

“எப்படியிருந்த போதிலும், இன்று இரவு அல்ஃபனேசினுடைய இல்லத்தில் நடக்கவிருக்கும் பிரபுக்கள் கூட்டத்திற்கு நீரும் வாரும். நாட்டின் நிலைமை குறித்துச் சிந்திக்கவும், ரஷேலின் யூத ஆதிக்கம் ஒழியவும் என்ன நடவடிக்கை எடுப்பது பற்றிச் சிந்திக்கப் போகிறேம். நீரும் வந்து உமது யோசனையைக் கூறும். அதோ பார், கிரேஷியா! ஓநாய் வந்து கொண்டிருக்கிறது.

கிரேஷியா திரும்பிப் பார்த்தான். நீண்ட தாடியும், கொடுமையும் அறிவும் கூடிக் குலவிடும் கண்களும் கொண்ட ரூபன் வந்து கொண்டிருந்தான். அவனைக் கண்டவுடன் லாராவும், கிரேஷியாவும் முகத்தைச் சுளித்துக் கொண்டு பிரிந்து சென்றனர்.

ரூபன் ஒரு யூதன். ரஷேலின் மாமன். அரசனிடம் அவனுக்கு மிக்க செல்வாக்கிருந்தது. அதைப் பயன் படுத்தி தன் இன மக்களுக்கு அரசாங்கத்தின் பட்டம் பதவிகளை அள்ளி வீசினுன். யூதர்கள் அவனைப் பேரறிஞனுகவும், இனக் காவலனுகவும் கருதினர். ஆனல் கிறிஸ்தவர்கள்...அதிலும் குறிப்பாக பிரபுக்கள், அவனைப் பரம வைரியாக கருதினர். இரண்டு பிரபுக்களும் ஏதோ கூடிப் பேசிக் கலைந்ததைக்கண்ட அவனுடைய கண்கள் அகல விரிந்தன. அவனுடைய உதடுகளில் ஒரு குறும்புப் புன்னகை நெளிந்தது.

“அழகி ரஷேல் உயிருடன் இருக்கும் வரையில், அரசன் என் கைப் பாவை. உங்களைப் போன்ற ஆயிரம் பிரபுக்கள் கூடினுலும், திட்டங்கள் தீட்டினுலும், காஸ்டில் நாட்டில் என் ஆதிக்கத்தை அசைக்க முடியாது.” என்று கூறிக் கொண்டு ரூபன் அங்கிருந்து நகர்ந்தான்.

✱

அன்று இரவு ஃபனேசின் மாளிகையில் பிரபுக்கள் கூடினர். ‘ரஷேல்—ரூபன்’ நாட்டில் நடமாடிடும் நாச உருவங்கள் என்பதில் அவர்களுக்குள் அபிப்பிராய பேதம் இல்லாவிட்டாலும், அவர்களின் பிடியிலிருந்து நாட்டை விடுவிக்கும் முறை யென்ன என்பதில் அவர்களுக்குள் அபிப்பிராய பேதம் இருந்தது.

ஃபனேஸ்தான் முதலில் பேசினுன்: “தோழர்களே, காஸ்டில் நாடு குடிகேடர்களின் கூடாரமாகி விட்டது. யூதர்கள் — இனவெறி பிடித்த அந்த ஓநாய்கள்—கிறிஸ்துவ ஆடுகளை வேட்டையாடத் தொடங்கி விட்டன. அந்த யூதன் ரூபனையும், அவன் உறவினள் ரஷேலையும் ஒழித்தாலொழியக் கிறிஸ்தவர்களுக்கு மறுமலர்ச்சி இல்லை. ஆகவே அந்தப் புனிதமான காரியத்தை நிறைவேற்ற சபதமெடுப்பதற்காக இப்பொழுது நாம் கூடியிருக்கிறேம். கிறிஸ்தவர்களின் எழுச்சியும் வீழ்ச்சியும் நாம் எடுக்கப்போகும் முடிவைப் பொறுத்திருக்கிறது என்றுன்.

லாரா, ஃபனேசின் திட்டத்தை ஆமோதித்ததோடு, பொதுவான யூத வேட்டையே ஒன்று நாட்டில் பெரிய அளவில் நடைபெற வேண்டுமென்றும் கூறினுன்.

ஆனல், கிரேஷியா மட்டும் ஒன்றும் பேசாமல் சிந்தனையில் ஆழ்ந்திருந்தான். அவனுடைய முடிவை அனைவரும் ஆவலுடன் எதிர்பார்த்தனர். கிரேஷியா பேசினுன்: “மாற்றுனிடமும் அன்பு செலுத்தும் மார்க்கத்தைக் கடைப்பிடிக்கும் நாம், கேவலம் ரஷேல் போன்ற ஒரு நிரபராதியான பெண்ணைக் கொலை செய்யத் திட்டமிடுவது நம்முடைய வீரத்திற்கு ஏற்படுத்திக்கொள்ளும் மாபெரும் களங்கம்”

ஆனல் கிரேஷியாவின் போதனைக்கு யாரும் செவி சாய்ப்பதாக இல்லை. ரஷேலையும், அவளுடைய மாமன் ரூபனையும் கொலை செய்வது என்று காஸ்டில் நாட்டுப் பிரபுக்கள் ஏகமனதாக முடிவு செய்தனர்.

✱

ஃபனேசின் மாளிகையில் சதி உருவாகிக் கொண்டிருந்த நேரத்தில் அல்பான்ஸோ மன்னன் தன்னுடைய அருமைக் காதலி ரஷேலோடு மஞ்சத்தில் குலவி மகிழ்ந்து கொண்டிருந்தான். ரஷேல ஒரு யூதப் பெண். வஞ்சனையை அந்தக் காலத்தில் யூத இனம் நிறைய நெஞ்சில் வளர்த்துக் கொண்டிருந்தாலும் அதில் பிறந்த ரஷேல், கள்ளங் கபடமற்ற உள்ளம் படைத்தவள். வேந்தனை அவன் பதவிக்காக அவள் காதலிக்க வில்லை. அவனுடைய வீரத்தில் மனதைப் பறி கொடுத்தாள். அவனைக் கண்டு அவள் தன் உள்ளம் பறி கொடுத்தபோது அவன் வேந்தனென்பதே அவளுக்குத் தெரியாது.

அல்பான்ஸோ வேட்டையாடுவதில் மிகுந்த விருப்பமுடையவன். வேட்டைக்குச் சென்ற இடத்தில் தான் இந்த வேல் விழியாளைப் பார்த்தான. அவளுடைய அழகு இவனை ஆட் கொண்டது. மன்ன

★ தொடர்ச்சி 10-ம் பக்கம்



‘திராவிடம் இல்லையெனில் நீரா இடர்தான்’—என தீப்பொறி கக்க ஆட்சியாளருக்கு அறிவுறுத்துகிருர் தலைவர், நாவலர் நெடுஞ்செழியன்.

## இதுவரையில்...

விடிந்தால் வெள்ளிக்கிழமை! வேதபுரத்து சிவநேசரின் மகள் சிந்தாமணி மறுநாள் காலையில் பெங்களூரிலிருந்து பெண் வீடு பார்க்க வரப்போகிற நிகழ்ச்சியை எண்ணிப் பூரிப்படைகிருள். தூக்கமே பிடிக்கவில்லை அவளுக்கு. பெங்களூர் மாப்பிள்ளை அழகப்பனின் உருவத்தை நினைத்து நினைத்து உற்சாகப் பண் இசைத்துக் கிடக்கிருள். அதிகாலையில் அவளது தோழிகள் ஆண்டாள் ராதா முதலியோர் வழக்கம்போல் அவளைத் திருக்குளத்திற்கு நீராட அழைத்துச் செல்கின்றனர். நீராடிக்கொண்டிருக்கும்போது அங்கே டைகர் வருகருன். டைகரின் சொந்தப் பெயர் ராமகிருஷ்ணன். ஊரிலே மைனர். உதவாக்கரை. அவன் சிந்தாமணிக்கு உறவினன் கூட! சிந்தாமணியைத் திருமணம் செய்திட முடன்று தோற்றவன். அவனது பிஷமத்தால் சிந்தாமணி கால் இடறி குளக்கரைப் படிகளில் விழுந்து பிரக்ஞையற்றுப் போகிறாள். அவளை, லேடி டாக்டர் ஆனந்தியின் மருத்துவ மனைக்குக் கொண்டு போகிறார்கள். ஆனந்தி ஊரிலே நல்ல பெயர் எடுத்தவள் தான் என்றாலும், டைகரின் தொடர்பு கொண்டவள். பாலகங்காதரத் தேவர் என்பவரின் சூழ்ச்சியில் ஏமாந்து கற்பைப் பறிகொடுத்து அதன் பின்னர் டைகரை ரகசியக் காதலனாக ஏற்றுக்கொண்டு வேதபுரத்தில் வாழ்க்கை நடத்துபவள். அவளிடம் சிந்தாமணி சிகிச்சைக்காக சேர்க்கப்படுகிருள். சிந்தாமணியைப் பார்ப்பதற்காக குறித்த நல்ல நேரத்தில் பெங்களூர் மாப்பிள்ளையின் தாயாரும், மாப்பிள்ளை அழகப்பனும், அவன் நண்பன் நயினா முகம்மதும் வேதபுரம் நோக்கி வந்துகொண்டிருக்கும் போது, வழியில் டைகரின் ஆட்களால் தாக்கப்படுகிருர்கள். அந்த முரடர்களிடமிருந்து நயினா முகம்மதின் தந்திரத்தால் அனைவரும் தப்புகிருர்கள்.

தப்பியவர்கள் வேதபுரம் வருகிருர்கள். சிவநேசரும் அவர் மனைவி சிவகாமியும் எல்லாம் காலை முதல் அபசகுனமாகவே முடிந்து விட்டதாகக் கூறி வருத்தப்படுகிருர்கள். சிவநேசர் பழுத்த சனுதனியானபடியால் அபசகுனங்களுக்கிடையே முதன் முதலாக பெண்ணை ஆஸ்பத்திரியில் சென்று பார்ப்பது கூடாது எனத் தடுக்கிருர். அழகப்பனும் அவன் தாயும் எவ்வளவோ சொல்லியும் அவர் கேட்கவில்லை. பிறகு அழகப்பனும் நயினா முகம்மதும் யாருக்கும் தெரியாமல் ஆனந்தியின் ஆஸ்பத்திரிக்குப் போய் சிந்தாமணியைப் பார்க்க முயலுகிருர்கள். பார்ப்பதற்கு அனுமதியும் கிடைக்கிறது.

ஆனால் சிந்தாமணியின் அருகே ஒரு சிசு கிடக்கிறது. நர்சு சொல்கிருள், "பிரசவமாகி யிருக்கிறது" என்று!

திருமணத்திற்குப் பெண் பார்க்க வந்திருக்கிருன் மாப்பிள்ளை! பெண்ணே பிரசவித்திருக்கிருள்!—அழகப்பன துடிக்கிருன். இந்த சூழ்ச்சியை மறைக்கத்தானு நாள் நட்சத்திரம், சகுனம் சாஸ்திரங்களின் மீது பழியைப் போட்டார் சிவநேசர் என்று சீறிப் பாய்கிருன். நயினா முகம்மது அவனை அங்கிருந்து அழைத்துக் கொண்டு வெளியே வருகிருன். பிறகு.......

★ ★ ★

**5**

எரிமலை போல் வரும் அழகப்பனையும் அவனைக் கட்டுப்படுத்தியவாறு பின் தொடரும் நயினாவையும் கண்ட ஆனந்தி, "ஏன்? என்ன நடந்தது?" என்று கேட்டாள்.

"இன்னும் என்ன நடக்கவேண்டும்; நடக்கவேண்டியதெல்லாம் நடந்து விட்டது!" என்று உரக்கக் கத்தினுன் அழகப்பன். அவன் வாயைப் பொத்தியவாறு நயினா முகம்மது ஆனந்தியைப் பார்த்து, "ஏனம்மா, சிந்தாமணியின் பிரசவம் எப்போது ஆயிற்று?" என்று கேட்டான். "இன்று காலையிலே தான்" என்று பதில் சொல்லிவிட்டு ஆனந்தி, டைகரின் முகத்தைப் பார்த்தாள். அகத்திலே எழுந்த ஆனந்தக் களிப்பை வெளியிலே காட்டிக் கொள்ளாமல் டைகர், ஆனந்தியை கண்ஜாடை செய்து வேறு பக்கம் அழைத்துக்கொண்டு போனுன். அவமானப் படுகுழியில் தள்ளப்பட்ட போதிலும்—பயங்கரம் நிறைந்த எதிர் காலத்திலேயிருந்து நிரந்தரமாக மீட்கப்பட்டு விட்டோம் என்ற ஆறுதல் ஒரு பக்கம் தலை காட்ட அழகப்பன் வெகு வேகமாக சிவநேசரின் வீட்டுக்குள்ளே நுழைந்தான்.

"என்ன மாப்பிள்ளை! இவ்வளவு வேகம்!" என்று சிரித்துக் கொண்டே கேட்டார் சிவநேசர். "ஓகோ! பல்லைவேறு இளிக்கிறீரா? பவிசு கெட்டவர்களே! எங்கள் குடும்ப கௌரவத்தையே குழியில் தள்ளி கோபுரம் கட்ட நினைத்த கொடுமதியாளர்களே! சிரிப்பு வேறு சிரிப்பு!" என்று கனல் கக்கினுன் அழகப்பன். சிவநேசர் அதிர்ச்சி அடைந்தார். சிவகாமி மரமானுள். தாயாரம்மாள் விழித்தாள். நயினா முகம்மது அழகப்பனை சாந்தப்படுத்துவதில் முனைந்து நின்ருன். "நயினா! என்னப்பா—என்ன நடந்தது!" என்று தாயாரம்மாள் பரபரப்போடு விசாரித்தாள்—"அம்மா! நாசம் நடக்க இருந்தது! மோசம் போக இருந்தோம்! நல்ல வேளை; வேஷம் கலைந்து விட்டதம்மா—தப்பி விட்டோம்! தப்பிவிட்டோம்!" என்று தணல் மேல் நிற்பவனைப் போல கூச்சலிட்டான் அழகப்பன். "புரியவில்லையா அம்மா உனக்கு! இந்தப் பேயர்கள் பெற்ற குலக்கொடியை இப்போது பார்க்கக் கூடாது என்று தடை போட்டார்களே, ஏன் தெரியுமா? நாள் நட்சத்திரத்தின் மீது பாரத்தைப் போட்டார்களே; அதன் மர்மம் புரியுமா? மாப்பிள்ளை வரவேண்டாம் பெண் வீடு பார்க்க; என்று கடிதம் மூலம் வலியுறுத்தியிருந்தார்களே; அதற்குக் காரணம் புரிந்து விட்டதம்மா!" என்று பேசிக்கொண்டேயிருந்தான் அவன். சிவநேசருக்கோ தன் கண் முன்னுல் நடைபெறும் சம்பவமும், காதிலே விழும் நெருப்பு மொழிகளும் உண்மைதானு?— என்ற ஐயமும் அதிர்ச்சியும் பிறந்தது! அசைவற்றுப் போனுர் அவர்.

"மாப்பிள்ளை என்ன சொல்லுகிருர்?" என்று சாவதானமாகக் கேட்டார் நயினாவிடம்! நயினா மௌனமாக நின்ருன். அழகப்பனே மறுபடியும் ஆத்திரக் குரலை எழுப்பத் துவங்கினுன்.

"மாப்பிள்ளை யென்று என்னை அழைக்காதீர்: மானம் பெரிது என வாழ்கிறவர்கள் நாங்கள்! எங்களுக்கும் மானத்தைப்பற்றியே கவலைப்படாத உங்களுக்கும் சம்பந்தி உறவு ஏற்பட எந்தக காலத்திலும் இயலாது!"

"தம்பீ! கொஞ்சம் வார்த்தையை அடக்கிப் பேசு! விஷயத்தைச் சொல்லாமல் வெடிக்கிருயே; ஏன்? மானம் அவமானத்தைப்பற்றி எனக்குப் பாடம் சொல்லித்தர உனக்கு வயது போதாது தம்பி! நிதானமாகப் பேசு! பதருதே! பைத்டம் என்று முடிவு கட்டுவார்கள்; உன் போக்கைப் பார்த்து!"

சிவநேசர் அமைதியாகவும் ஆனல் கண்டிப்பாகவும் இந்த வார்த்தைகளைப் பிரயோகித்தார். தாயாரம்மாள், அழகப்பனின் ஆவேச ஆட்டத்தை நிறுத்தி "விஷயத்தைத்தான் சொல்லேண்டா." என்று கத்தினுள்.

"சொல்லக்கூடிய விஷயம் இல்லையம்மா! ஆனல் சொல்லாமலும்

நாயன வேந்தருக்கு அறிஞர் அண்ணு மாலை அணிவிக்கிருர்!

**மு. கருணாநிதி**

இருக்க முடியாது! இதோ நிற்கிறாரே; இந்தப் பெரிய மனிதர்: இவர் எமக்கு அளிப்பதாக வாக்களித்த பெண் இருக்கிறாளே; வைரச்சிலை! கூழாங்கல்! சிந்தாமணி! அவள் இன்று காலையில்தான் ஒரு குழந்தைக்குத் தாயாராகியிருக்கிறாள்—இந்த உத்தமர் தாத்தாவாகியிருக்கிறார்!'' அழகப்பன் வாய்மூடவில்லை; சிவநேசர், ''அய்யய்யோ கடவுளே!'' என்று கூவி விட்டார்!

''யார் இந்த அபாண்டத்தைக் கட்டிவிட்டது?'' என்று சிவகாமி ஒப்பாரி வைக்கத் தொடங்கினாள்.

அழகப்பன், தாயாரிடம் நெருங்கி ''அம்மா! இனி ஒருக்கணமும் இங்கிருக்கக் கூடாது! உடனே புறப்படு! இந்தக் குப்பை மேட்டில் பெண் கேட்க வந்தோம் என்று யாருக்காவது தெரிந்தால் கூட அவர்கள் இனிமேல் நம்மை மதிக்கமாட்டார்கள்! நம் சம்பந்தத்தை விரும்பமாட்டார்கள்! புறப்படம்மா; புறப்படு!'' என்று அவசரப்படுத்தினான். சிவநேசர் வெறி கொண்டவர் போல் ''என் பெண், தாயாகிவிட்டாளா? அக்ரமம்! அபாண்டம்! அய்யோ! அடுக்காது! அடுக்காது! யாரோ என் குடும்பத்தைக்கெடுக்க சூழ்ச்சி செய்து விட்டார்கள்! பெரிய இடத்திலே உறவு ஏற்படப் போகிறது சிவநேசனுக்கு என்று உறுமிக் கொண்டிருந்தவர்கள் இப்படி ஒரு பயங்கரமான உபாயத்தைக் கையாண்டிருக்கிறார்கள்! நம்பாதீர்கள்! நம்பாதீர்கள்!! யாரோ கட்டிவிட்ட கதை இது!'' என்று புலம்பியழுதார்!

''ஆகா! உணர்ச்சிகரமான நடிப்பு! நாடகத்திலே சினிமாவிலே 'அப்பா' வேடத்திற்கு அபாரமான பொருத்தம்!'' என்று கூறி கலகலவென சிரித்தான் அழகப்பன். ''அய்யோ—ஊர் பேச்சை கேட்காதீர்கள்!'' என்று சிவகாமி ஓடிவந்து தாயாரம்மாளின் கால்களை கெட்டியாகப் பிடித்துக் கொண்டு கதறினாள்.

''யார் பேச்சையும் கேட்கவில்லையம்மா நான்! நானும் நயினாவும் நேரிலேயே பார்த்தோம்—லேடி டாக்டர் ஆனந்தியின் ஆஸ்பத்திரியில் சிந்தாமணி—பக்கத்திலே குழந்தையுடன் படுத்திருந்த காட்சியை நேரிலேயே பார்த்தோம்!''

''அது யார் குழந்தையோ என்னமோ?'' சிவகாமி ஓலமிட்டாள்.

''பிரசவக் களைப்பால் சிந்தாமணி அயர்ந்திருக்கும் விஷயத்தையும் அங்கிருக்கும் நர்சு சொன்னாளம்மா? கண்ணால் கண்டது பொய்யல்ல! காதால் கேட்பதும் பொய்யல்ல! புறப்படம்மா உடனே இதைவிட்டு!''

''சிவகாமி! சிவகாமி! என்ன இது? என்னடி மோசம் இது! சிந்தாமணிக்கு பிரசவமா? அய்யோ தெய்வமே!'' என்று தலையிலே அடித்துக்கொண்டார் சிவநேசர். சிவகாமியோ தரையிலே விழுந்து புரண்டு அழுதாள்.

''தம்பீ! உங்களுக்கு இந்த வீட்டு உறவு வேண்டாம் என்றால் பிடிக்கவில்லையென்று சொல்லிவிட்டுப் போய் விடுங்கள்! அதற்காக இப்படியெல்லாம் எரிமலைக் குழம்பை வாரி எங்கள் மீது இறைக்காதீர்கள்! நீங்கள் செல்வர் வீட்டுப் பிள்ளை! நாங்கள் ஏழைகள்! ஏணி வைத்தாலும் உங்களுக்கும் எங்களுக்கும் எட்டாது! உங்களைப் போன்றவர்களின் உறவு வேண்டுமென்ற எங்கள் பேராசைக்கு இதுவும் வேண்டும்; இன்னமும் வேண்டும்! சிந்தாமணி, கல்யாணம் ஆக வேண்டிய பெண்! கடைச் சரக்கல்ல அவள்! இதைப் போன்ற களங்கமும் பழியும், ஒரு கன்னிப் பெண்ணின் வாழ்க்கையைப் பாலைவனமாக்கிவிடும் தம்பீ! தயவு செய்து உங்கள் தவறான எண்ணத்தை மாற்றிக் கொள்ளுங்கள்! சிந்தாமணி தங்கம்! மாசுமருவற்ற மல்லிகைப்பூ என் மகள்! அவளுக்கு பட்டம் சூட்டவா உம்மை பெங்களூரில் இருந்து வரவழைத்திருக்கிறோம். வேண்டாம்—என் பெண் உங்களுக்கு வேண்டாம்! போய் விடுங்கள்! பொல்லாங்கு பேசாமல் போய் விடுங்கள்!!''

சிவநேசர் உள்ளம் உடைந்து பொங்கினார். குமுறி யெழுந்த உணர்ச்சித் தீயைக் கொட்டினார். அழகப்பனோ ஆத்திரத்தின் உச்சியிலிருந்து ஒரு படியும் இறங்கவில்லை. சூழ்ச்சி பலிக்கவில்லை யென்றதும் சுற்றி வளைத்துப் பேசி தப்பித்துக் கொள்ள வழி தேடுகிறார்கள் என முடிவு கட்டினான். ''நீர் ஆயிரந்தான் சொன்னாலும் சரி; உம்மை நம்பமுடியாது! நான் நேராகவே பார்த்தேன்; உமது மகளையும்—உமது பேரக் குழந்தையையும் ஆஸ்பத்திரியில்! விஷயம் வெளிச்சமாகி விடும் என்றுதானே, எங்களை ஆஸ்பத்திரிக்கு செல்லக் கூடாது—அபசகுனம் என்று தடுத்தீர்! அம்மாவின் ஒளி மங்கிய விழிகளை எப்படியாவது ஏமாற்றி வழி தவறிய பெண்ணை என் தலையில் கட்டிவிடலாமென்ற நம்பிக்கையில்தானே மாப்பிள்ளை வர வேண்டாம்; அம்மா வந்தால் போதும் என்று கடிதம் எழுதினீர்கள்! ஆரம்பத்திலேயே அகப்பட்டுக் கொண்டீர்கள்; ''அரிச்சந்திரமயான காண்டம்'' நடத்தி சமாளிக்கிறீர்கள்—நாங்கள் உங்களிடம் ஏமாந்திருந்தால் நாள்தோறும் ''பாரதம்'' அல்லவா நடக்கும் எங்கள் வீட்டில்! என்று கேலியும் கிண்டலும் செய்தான்; இடையிடையே சீறியும் விழுந்தான் அழகப்பன். இவ்வளவு நேரம் மௌனமாக இருந்து இந்த அசம்பாவித நிகழ்ச்சியைக் கவனித்துக்கொண்டிருந்த நயினாமுகம்மது, சிவநேசரை அணுகி மெதுவாக ''நான் ஒன்று கேட்கிறேன் கோபித்துக் கொள்ளக் கூடாது! நாங்கள் சந்தேகப்படுவது தவறு என்றால் நீங்கள் ஏன் உங்கள் மகள் தூயமையான பெண் என்பதை நிரூபிக்கக் கூடாது? அதற்காக முயற்சி எடுத்துக் கொள்ளுங்களேன்!'' என்று கூறினான். சிவநேசர் சிறிது யோசித்தார். அதற்குள் அழகப்பன் குறுக்கிட்டான். ''அடே நயினா! ஏ முட்டாள் இனிமேல் என்னடா நிரூபிப்பது! இருவரும் நேரிலேயே பார்ததோம்—இதற்கு சாட்சி வேறு வேண்டும்! புறப்படடா!'' என்று அதட்டினான்.

''நிரூபித்தால்தான் நீங்கள் எங்கே ஒப்புக் கொள்ளப் போகிறீர்கள்! எங்கள் பெண்ணை—நாங்கள் பெற்ற கண்ணை—குறைசொல்ல வேண்டுமென்பதற்காகவே இவ்வளவு முன்னேற்பாடுகளும் செய்திருக்கிறீர்கள்! பரவாயில்லை! சிந்தாமணி அதிர்ஷ்டக்காரிதான்! உங்களைப் போன்ற அவசரக்காரர்களிடமிருந்தும்—அக்ரமக்காரர்களிடமிருந்தும்—அவள் தப்பியதே பெரிய அதிர்ஷ்டம் தான்!'' என்று சிவநேசர் கடுமையாகப் பதில் கூறினார். சிவகாமிக்குத் தாங்க முடியவில்லை. பெற்ற வயிறல்லவா? பெண்ணைப்பற்றி பிறர் ஒன்று சொல்ல சம்மதிக்குமா! மாசற்றவள் தனது மகள் என்பதை எப்படியாவது நிரூபித்துவிட வேண்டும் என்று தவித்தாள். ''வாருங்கள்—எல்லோருமே மறுபடியும் ஆஸ்பத்திரிக்குப் போவோம்! நீர விசாரிப்போம். என் மகள் தூய்மையானவள் என்பதை உணர்த்துகிறேன்.'' என்று உறுதியோடு எழுந்து நின்று மற்றவர்களையும் அழைத்தாள். ''ஏன் லேடி டாக்டருக்கு ஏதாவது லஞ்சம் கொடுத்து, ஏமாற்றலாம்—சிந்தாமணியை எப்படியாவது தலையில் கட்டிவிடலாம் என்ற ஏற்பாடா? வேண்டாம்! வேண்டாம்!'' என்று கூறி தாயாரின் கையைப் பிடித்து வெளியே அழைத்துக் கொண்டு புறப்பட்டான் அழகு! நயினாவுக்கும் எந்த முடிவும் தோன்றவில்லை. அவனும் பின் தொடர்ந்தான்.

''என் குடும்பத்தை அடியோடு கெடுத்துவிட்டுப் போகும் கொலைகாரர்களே! நீங்கள் உருப்படுவீர்களா? மண்ணாய்ப் போங்கள்!'' என்று ஆவேசமாகக் கத்தி 'சாப'மிட்டார் சிவநேசர்!

''என் பெண், கெட்டவளா? அட தெய்வமே! இவர்கள் நல்லாயிருப்பார்களா?'' என்று மாரடித்துக் கொண்டு கோவென அழுதாள் சிவகாமி!

கூச்சலுக்கும் குழப்பத்துக்குமிடையே அழகப்பன், தாயாரை காரில் உட்காரவைத்து, தானே காரை வேகமாக ஓட்டுவதற்கு அமர்ந்தான். சிவநேசர் சிவகாமி இருவரும் மாறி மாறி சபித்துக் கொண்டேயிருந்தார்கள்! அந்த சாபத்தை பொறுக்க முடியாத தாயாரம்மாள், ''அட, ஏன் இப்படி திட்டுகிறீர்கள்; நீங்கள் நாசமாய்ப் போக! என் பிள்ளையை ஏமாற வைத்து, எங்கள் மதிப்பையே குலைத்த நீங்கள் புழுத்துத்தான் சாவீர்கள்!'' என்று பதிலுக்கு 'சாபம்' கொடுத்தாள். நல்லவேளை இருவரின் சாபங்களுக்கும் சக்தியில்லாமல் போய்விட்டது! அழகப்பன் காரை வேகமாக ஓட்ட ஆரம்பித்தான். கார் புறப்படுவதிலேயே அவன் உள்ளத்தின் வேகம் புலப்பட்டது! விடைவிட்டு 'விர்' எனப் பறந்த காரின் முன்னே ஒரு பெண் கூச்சலிட்டவாறு ஓடி வந்தாள்! ''நிறுத்துங்கள்! நிறுத்துங்கள்!'' என்று அவள் சப்தம் போட்டுக் கொண்டு ஓடிவந்தாள். காரை நிறுத்துவதற்குள் அவள் காரின் முன்னே வந்து விழுந்தாள். அவள் மீது காரின் முன் சக்கரம் ஏறியது! ''ஆ!'' என்ற அவளது கூச்சல் மட்டுமே கேட்டது! கார் நின்றது—அழகப்பன், நயினா, டிரைவர் முதலியோர் இறங்கி ஓடிவந்தனர். அந்தப் பெண் ரத்த வெள்ளத்திலே மிதந்து கொண்டிருந்தாள்.

கலைவாணர் பூமாரி பெய்ய, அறிஞர் அண்ணா இராமாமிர்தத்தம்மையாருக்கு விருது தரும் காட்சி!

தொடரும்

★

வைதீகபுரியினர் பேய்க் குலமாக்கியிருக்கும் 'தாய்க் குல வரலாறு' தந்தார்

தோழியர்
**சத்தியவாணிமுத்து**

★

★ 7-ம் பக்கத் தொடர்ச்சி

# யூதப் பெண்...

னின் வீரம் மங்கை நல்லாளை மையல் கொள்ளச் செய்தது. அழைத்து வந்து விட்டான் அவளை அரண்மனைக்கு! அவளோடு, அவளுடைய மாமன் ரூபனும் வந்தான். புள்ளி மானோடு இரத்த வெறி பிடித்த புலியும் நுழைந்ததுதான் நாட்டில் புயலைக் கிளப்பி விட்டது. ரஷேலின் அழகை ஆயுதமாக்கி அரசாங்கத்தில் தன் இனத்தவருக்குப் பதவிகளை வாங்கிக் கொடுப்பதையே லட்சியமாகக் கொண்டான் ரூபன். யூத ஆதிக்கம் வளருவதை, அவர்களை வைரியாகக் கருதிய கிறிஸ்தவர்கள் அடியோடு வெறுத்தார்கள்.

ரஷேல் அதிசய அழகி. மன்னனை விளையாட்டு பொம்மையாக உருட்டினாளே தவிர, அவனுடைய அன்பை எந்தத் தவறான காரியத்திற்கும் அவள் பயன்படுத்தியதில்லை. ஆகவே, அரசன் அல்பான்சோவுக்கு அவளிடம் அபார நம்பிக்கை இருந்தது.

"பிரபோ...!"

"கண்ணே..."

"தங்களுடைய பிரபுக்கள் முன் போல் தங்களிடம் விஸ்வாசமாக இல்லையாமே!"

"யார் சொன்னது? உன்னிடம் மனதைப் பறி கொடுத்து, அரசியல் காரியங்களில நான் உரிய நாட்டம் செலுத்தவில்லை என்பது அவர்களுடைய குற்றச்சாட்டு. அதற்கும் காரணம், அவர்களுக்கு என்னிடமுள்ள அபரிமிதமான அன்புதான்"

"இல்லை பிரபோ! எனக்கென்னமோ வரவரப் பயம் அதிகரிக்கிறது."

"பைத்தியக்காரி!"

"என்னை பைத்தியக்காரி என்றோ அல்லது வேறு எது வேண்டுமானாலும் சொல்லி அழையுங்கள். என்னிடம் உங்களுக்குள்ள அன்பே நம்மிருவருக்கும் யமனாக முடிந்து விடுமோ என்று பயப்படுகிறேன்." அவள் முகத்தில் கலவரக் குறி பரவியிருந்தது. கண்களில் நீர் சுரந்திருந்தது.

"பயப்படாதேகண்ணே! அல்பான்சோவின் அன்பு உனக்குத் துணை நிற்கும் வரையில், எந்தச் சக்தியும் உன்னையும் என்னையும் எதுவும் செய்துவிடாது. மைவிழி மாதர்களின் காதல்தான், எத்தனையோ போர் வீரர்களைக் களத்தில் வீர காவியம் தீட்டச் செய்திருக்கிறது,'

பயத்தினால் ஓடிடும் முயல் புதரில் பதுங்குவதுபோல், அவனுடைய மார்பில் முகத்தைப் புதைத்துக் கொண்டாள். அவன் அவளுடைய பொன்னிற கூந்தலை மெதுவாகக் கோதினான்.

"ஹூம்...ரஷேல், நாளை நான் வேட்டைக்குச் செல்லப் போகிறேன் — வேட்டைக்குப் போய் வெகு நாளாகிவிட்டது"

அவள் பதில் பேசாமல், அடிபட்ட மான்போல் அவனுடைய முகத்தை ஏறிட்டுப் பார்த்தாள்.

"என்ன ரஷேல், இப்படித் திடீரென்று கோழையாகி விட்டாய். அல்பான்சோவின் அழகுப் பெட்டகம் ரஷேல், அவனைப் பிரிந்திருக்க அச்சப்படுகிறாள்—நம்மிருவருக்குமே இது அவமானம் ரஷேல்!"

அவள் பேசவில்லை. விழிகளால் வேண்டினாள். அவன் அன்போடு அவள் கன்னத்தை வருடினான்.

"பொழுது சாயுமுன் வந்துவிடுவீர்களல்லவா?"

"வராமல்... ஆடும் மயில், பாடும் குயில், பாய்ந்தோடும் மான், பகலவன் கிரணம் பட்டுப் பளிச்சிடும் பனித்துளி — இத்தனையும் உன்னைத்தான் நினைவு படுத்தும்!"

அவள் சோகப் புன்னகையோடு அவன் மார்பைத் தழுவிக் கொண்டாள். அன்று இரவு இன்ப இரவாயிற்று.

★

மறுநாள் காலை பொழுது புலருமுன் அல்பான்சோ வேட்டைக்குப் புறப்பட்டான். ரஷேல் ஏக்கத்தோடு விடை கொடுத்தாள். பகலெல்லாம் உற்சாகத்தோடு வேட்டையாடினான். வேட்டையின் விறுவிறுப்பில் காலம் போனதே தெரியவில்லை. அடர்ந்த காட்டிலிருந்து வெளிவந்த போதுதான், சூரியன் சிவப்புக் கோளமாக அஸ்தமித்துக் கொண்டிருப்பதை உணர்ந்தான். உடன் வந்திருந்த ஓரிரு பிரபுக்களையும் கூட்டிக் கொண்டு வாயுவேகம் மனோ வேகமாக மாளிகையை நோக்கிக் குதிரையை விரட்டினான்.

அல்பான்சோ மாளிகையை நெருங்கினான். மாளிகைக்கு முன் ஒரு மாபெரும் கூட்டம் நின்று கூச்சலிட்டுக் கொண்டிருந்தது. உள்ளத்தை பயம் கிள்ள கூட்டத்தை நெருங்கினான். அங்கு அவன் கண்ட காட்சி பயங்கரமானதாயிருந்தது. அவன் கண்களே அதை நம்ப மறுத்தன.

வெட்டுண்ட ரூபனின் தலையை ஈட்டியில் குத்திப் பிடித்துக்கொண்டு வெற்றிக் கோஷம் இட்டுக் கொண்டிருந்தனர் மக்கள். ரஷேலின் கதி என்ன வாயிற்று என்பதை உணரும் ஆவலில், பரபரப்போடு மாளிகையில் நுழைந்தான்.

அவனுடைய வாழ்க்கையின் இன்ப காவியம்—இதயத்தின் அமர ஓவியம் கட்டாரியால் குத்துண்டு, மரணத் தறுவாயில் இருந்தாள்!

"ரஷேல்!" அவன் வீறிட்டு அவளுடைய உடலின்மேல் வீழ்ந்தான். அவள் கண் விழித்தாள்.

"பிரபு, உயிர்விடும் தறுணத்திலாவது உங்களுடைய மடியிலிருந்து உயிர்விடும் பேறு கிடைத்ததே!" வெளிறிப்போன அந்த உருவம் லேசாகச் சிரித்தது.

"அன்பே, அல்பான்சோ வீரன் என்று விருதுபெற்று என்ன பயன்? காதலியைக்கூட காப்பாற்ற முடியாதவனாகி விட்டேனே...!"

"வருந்தாதீர்கள்...'ரஷேல்' என்று வாய் நிறைய ஒருமுறை அழையுங்கள்—அதை நான் காது குளிரக் கேட்டுவிட்டுச் சாகிறேன்!"

"ரஷேல்...ரஷேல்..." — அவன் கதறினான். அவள் மகிழ்ச்சி பொங்க உயிர்விட்டாள்.

★

சவத்தைப் பிடியிலிருந்து அப்புறம் தள்ளினான். வாளைக் கையிலேந்தி வஞ்சகர்களைப் பழிவாங்க மாளிகையிலிருந்து வெளியே வந்தான்.

வெளியில் கலகக்காரர்கள் கோஷமிட்டுக் கொண்டிருந்தனர். "அல்பான்சோ மன்னர் வாழ்க!" "ரஷேல் ஆட்சி ஒழிக!" — "யூத ஆதிக்கம் ஒழிக!" என்ற ஒலிகள் வானைப் பிளந்தன.

மன்னனின் கண்களில் கோபம் ஜ்வாலையிட்டது. "கோழைகளே, முட்டாள்களே! என் காதல் ஓவியத்தைக் கலைத்தபின் எனக்கு ஏதடா வாழ்க்கை? ஆண் அருகில்லாதபோது பெண்ணைக் கொலை செய்யும் கோழைகளை—கொடியவர்களை— உற்பத்தி செய்துள்ள நாட்டின் காவலன் என்பதற்காக வெட்கப்படுகிறேன், வேதனைப் படுகிறேன். திரை மறைவில் திட்டம் தீட்டி, துணையில்லாத பெண்ணை படுகொலை செய்த தீரர்களே, காஸ்டில் மண்ணின் வீரம் இன்னும் உங்களிடம் பறி போகாமல் இருந்தால், என் வாளுக்குப் பதில் சொல்லுங்கள். அல்பான்சோ கோழையல்ல, அதிகாரத்தைப் பயன்படுத்தி உங்களைத் தண்டிக்க. முறை தவறிய உங்களுக்கு என் வாள் வழி காட்டும்...ஹூம்"

கூட்டம் அமைதியாக அவனுடைய சொல்வீச்சைக் கேட்டது. பிரபுக்கள் வாயடைத்து நின்றனர்.

',மன்னா! ஆரணங்கின் பிடியில் சிக்கி, சட்ட பூர்வமாக உங்களை விடுவிக்க முடியாத நிலையில், நாடு யூதர்களின் வேட்டைக்காடாவதைத் தடுக்க, நாட்டுப் பற்றுடையோரைக் கூட்டி, சதியை உருவாக்கியதும் நிறைவேற்றியதும் நானே தான். காஸ்டில் நாட்டுக்கு என் கடமை முடிந்து விட்டது. என்னை நன்றாகப் பழி வாங்குங்கள் ... மன்னா! முன் உங்கள் உயிரைக் காப்பாற்ற எவ்வளவோ தியாகம் செய்தவன் நான் என்பது உங்களுக்குத் தெரியும். இப்பொழுது நான் செய்யப் போகும் உயிர்த்தியாகம் உங்கள் கண்களைத் திறக்க உதவுமானால், நான் பெரிதும் மகிழ்ச்சியடைவேன்" என்று கூறி, தலையை வெட்டுவதற்குத் தயாராகத் தலை குனிந்தான் லாரா.

நாட்டுப் பற்றின் நாயகமாய் விளங்கும் லாராவை புனல் வழியும் விழிகளோடு அல்பான்சோ மன்னன் பார்த்தான். வாள் அவன் கரங்களிலிருந்து நழுவிக் கீழே விழுந்தது.

காதலுக்காக உயிரைத் தியாகம் செய்த ரஷேலையும், நாட்டுக்காக உயிர்த் தியாகம் செய்யத் தயாராயிருக்கும் லாராவையும் தன் மனத் தராசில் எடை போட்டு முடிவு காண முடியாமல் விழித்தான் அல்பான்சோ மன்னன்!

★

★

ஆச்சாரியார் அறிவு பெறும் வகையில் '**கல்வித் திட்டம்**' குறித்து கர்ஜனை புரிந்த

தோழர்
**இராசையா**

★

★

'உரிமைக் கிளர்ச்சிகள்' என்ற தலைப்பில் உயர் எண்ணங்களைத் தந்த

தோழியர்
**அருண்மொழி**

★

கொள்கையைக் குழப்பும் தோழர்களை மக்கள் முன்னே காட்டிக் கொடுப்போம் என்று மார்தட்டுகிறார் சம்பத், 'அரசியலில் கொள்கைக் குழப்பம' என்ற தலைப்பில்!

★ 6-ம் பக்கத் தொடர்ச்சி

கணைகளைப்போல மழைத் துளிகள் வேகவேகமாகப் பந்தலில் விழ ஆரம்பித்தன.

நம் தோழர்கள் எப்போதும் குடைநிழலில் இருந்து பழக்கப்பட்டவர்களல்லவே! கொட்டுகிற மழையை 'ஷவர் பாத்'தாகக் கருதிக்கொண்டு தாய்மார்களையும் குழந்தைகளையும் பாதுகாப்பான இடத்துக்கு அதிவேகமாக அப்புறப்படுத்திவிட்டார்கள்.

மழையால் தரை நனைந்திருந்தும் கூட, அன்றிரவு இலட்சிய நடிகர் ராசேந்திரன் குழுவினரின் உள்ளங்களையெல்லாம் ஊடுருவினுர்.

"பொதுச் செயலாளரைத் தந்த மாவட்டம் தஞ்சை. அந்த வகையிலே எங்கள் பூரிப்பு இரட்டிப்பாகிறது" — என்ருர் அருமைத் தோழர் என். எஸ். இளங்கோ.

',பொதுச் செயலாளருக்குப் பெண் கொடுத்தது சேலம் மாவட்டம். அந்த வகையில் நாங்கள் பெருமைப் படுகிருேம்" — என்று கூறியவாறு மாலை அணிவித்தார் தோழர் ஜி. பி. எஸ்.

"அவர் கல்வி கற்ற இடம்

"புத்தர்" மார்க்கமே நாட்டுக்குப் பொலிவு தரும் மார்க்கமென முழக்கமிடுகிறார் ஆசைத்தம்பி.

எங்கள் மாவட்டத்திலேயுள்ள அண்ணாமலைப் பல்கலைக்கழகம். அந்தவிதத்திலே நாங்கள் பெருவகையடைகிருேம்"— என்ருர் தென்னுற்காடு மாவட்டச் செயலாளர் சாம்பசிவம்.

'மணிமகுடம்' எல்லாச் சிறப்புகளுடனும் இனிது நடைபெற்றது.

தலைவரை வழிமொழிவதும், அவரது முன்னுரையும் மறுநாள் சனிக்கிழமையன்று ஒத்திவைக்கப்பட்டன.

அறிஞர் அண்ணு அவர்கள்,
"தம்பி வா! தலைமை தாங்க வா! உன் ஆணைக்கு நாங்கள் எல்லோரும் அடங்கி நடப்போம்! தலைமை ஏற்று நடத்த வா!"

—என்று தலைவர் நெடுஞ்செழியனை வழிமொழிந்து, கூடியிருந்த இலட்சக்கணக்கான மக்களின்

"ஜனநாயக ரீதியாகப் பார்க்கப்போனுல், பொதுச் செயலாளர் எங்கள் மாவட்டத்திலிருந்துதான் பொதுக்குழு உறுப்பினராகி, பின் பொதுச் செயலாளர் பதவியேற்றிருக்கிருர். ஆகவே பெருமை எங்களைத்தான் சேர்ந்தது"—என்று உறவு கொண்டாடினுர் சென்னைச் செயலாளர் இளம்பரிதி.

மதுரை வீரர் முத்து மட்டும் என்ன சாமன்யமா? "பாண்டிய

தனிநாடுஅமைப்பில் பொருளாதார வளம் குலுங்கும், என ஆதாரத்தோடு விளக்குகிருர் என். எஸ். இளங்கோ.

மன்னன் ஒருவருடைய பெயரைத்தான், தன் பெயராகக் கொண்டிருக்கிருர் நெடுஞ்செழியன். ஆகவே பெருமையில் எங்களுக்கும் அதிகப் பங்குண்டு" — என்ருர் தோழர் முத்து; மதுரை மாவட்டத்தின் சார்பாக!

இலங்கைத் தோழரோ, "பாடுபடும் தோழர்களுக்குத்தான் பொதுச் செயலாளர் சொந்தம். ஈழத்திலே கண்ணீர் வடிக்கும் ஆயிரமாயிரம் திராவிடர் சார்பாக அவருக்கு மாலையணிவிக்கிறேன்"—என்று கூறி மாலையணிவித்தார்.

எல்லோருக்கும் பொதுவான பொதுச் செயலாளரை இவர்கள் போட்டிபோட்டுக்கொண்டு உறவு கொண்டாடியது வந்திருந்தோரின் உள்ளத்தையெல்லாம் கவர்ந்தது!

— இந்தக் காட்சிகளையெல்லாம் நான் விவரித்துக் கொண்டே சென்ருல் உனக்கு அழுகை வந்துவிடும்; நேரில் காணும் நிலை எனக்கில்லையே என்று எண்ணி நீ கண்ணீர் விடுவாய். எனவே சுருக்கமாகவே முடித்துக்கொள்கிறேன்.

தலைவர் நெடுஞ்செழியனது முன்னுரைக்குப் பிறகு காலை நிகழ்ச்சி முடிவுற்றது.

மாலையில் முன்பே நிகழ்ச்சி நிரலில் குறிப்பிடப் பட்டிருந்தபடி சிறப்புச் சொற்பொழிவுகள் துவங்கின,

நம் கழகச் சொற்பொழிவாளர்கள் அத்தனை பேரும், பல்கலைக் கழகங்களிலே சிறப்புச் சொற்பொழிவுகள் நடைபெறுமே அதற்கு ஒப்பான வகையில் அறிவியக்கக் கருத்துக்களை அனல் நடையில் ஒருவர், கேட்பவர் கண்களில் புனல் கிளம்பும் பீடு நடையில் ஒருவர், ஆங்காரப் புயல் நடையில் அமைதிகாணும்அருவி நடையில், அலங்கார அணி நடையில்-ஆக ஒவ்வொருவரும் தங்களுக்கே உரித்தான தனி நடையில் உரிமை முழக்கத்துக்கான ஆதாரங்களை அள்ளி வீசினர்.

அன்றிரவு 'அட்வகேட் அமரனை' அழைத்து வந்தார் புரட்சி நடிகர் எம் ஜி ராமச்சந்திரன்

தாயகம் பெற்றிட வழக்காடும் 'அட்வகேட்'களை தயார் செய்திடும் விதத்தில் அவரது நாடகம் அமைந்திருந்தது!

மறுநாள் ஞாயிறு, நான்கு நாள் நிகழ்ச்சிகளுக்கும் மகுடம் புனைவிக்கும் மகத்தான நிகழ்ச்சி இன்றுதான்!

எங்கு கற்றனரோ இத்தகைய ஒழுங்கு முறையை ?-என்று மாற்ருரும் மருளும் வகையில் எறும்பு வரிசையைப் போல் அணி வகுத்து நின்று மக்களெல்லாம் நாம் 'தேர்தலுக்கு நடத்திய தேர்தலில்' கலந்து கொண்டனர்.

ஆம், தோழா; நுழைவுச்சீட்டு பெற்ற ஒவ்வொருவரின் கையிலும் வாக்குச் சீட்டுகள் அளிக்கப்பட்டன. ஒவ்வொரு மூலையிலும் இரு பெட்டிகள்—கருப்பு நிறப் பெட்டி யொன்று; செந்நிறப்பெட்டி யென்று வைக்கப் பட்டிருந்தது! நாம் தேர்தலில் நேரடியாகப் போட்டியிட வேண்டுமென்று கருதுபவர்கள் சிகப்புப் பெட்டியிலும், வேண்டாமென்று கருதுபவர்கள் கருப்புப் பெட்டியிலும் தங்கள் ஓட்டுகளையளித்தார்கள்.

இந்த மாபெரும் ஓட்டெடுப்பில் அறுபதாயிரம் பேர் கலந்து கொண்டனர்.

"திராவிடத்தின் உலகத் தொடர்புகள்" பழங்காலத்தில் எவ்வளவு பெருமை வாய்ந்தனவாய் இருந்தன என்பது பற்றி வேதனையோடு பேசுகிருர் ம. க

"மருதல் முரசு கொட்ட வாரீர்" என வீரகாவியம் பாடுகிருர் மதியழகன்,

சட்டசபையில் மட்டுமின்றி மாநில மாநாட்டிலும் கோவிந்தசாமி எம்.எல்.ஏ. சங்கநாதம் புரிகிருர்.

"தத்துவ வரலாறு" பற்றி சுவை மிக்கதோர் சொல்லாரம் அணிவிக்கிருர் டி. கே. சீனிவாசன்.

"கலையில கருத்துப் புரட்சி' என்னும் தலைப்பில் சர்ச்சித்தார் சிந்தனை சிற்பி சிற்றரசு.

56 942—பேர் 'வேண்டும்' என்றும். 4 203 பேர் 'வேண்டாம்' என்றும் தங்கள் அபிப்பிராயங்களைத் தெரிவித்துக் கொண்டனர்.

'வேண்டாம்' என்று கூறுவதற்கும் நாலாயிரம்பேர் இருக்கிருர்களா ?—என்றுதானே நீ கேட்க நினைக்கிருய்! எனக்குப் புரிகிறது நண்பனே. அந்த நாலாயிரம் பேர் எண்ணிக்கையையும் ஓரளவு குறைத்திருக்கலாம், முன் நடந்த மூன்று நாள் நிகழ்ச்சிகளிலும் நம் கழகப் பேச்சாளர்கள் 'நாம் தேர்தலில் கலந்துகொண்டுதான்' ஆக வேண்டும்! என்பதற்கான காரணங்களைக் காட்டியிருந்தால்! இப்படிச் செய்யவில்லை; ஏனெனில் அவ்வாறு நடந்தால் பொதுமக்களையெல்லாம் வாக்கு வன்மையால் கவர்ந்து விட்டார்கள் என்றல்லவா நம்மைப் பழியுரைப்பர் பாதகர்!

மக்களே தீர்ப்பு தந்துவிட்டனர்-ஒரு ஜனநாயக அமைப்பு வேறெந்தத் திசையிலிருந்து உத்தரவை எதிர்பார்க்க வேண்டும்? எனவே அது மாநாட்டிலே தீர்மான வடிவம் கொண்டது!

இந்தியா காமன் வெல்த்தை விட்டு வெளியேற, என். ஜி ஓக்களின் நிலையை உயர்த்த, இலங்கைவாழ் தமிழருக்கு நல்வாழ்வுதர, அணு ஆயுதப் பரிசோதனைகளைக் கைவிட, தமிழ் ஆட்சி மொழியாக, தட்சிணப் பிரதேச அமைப்பை எதிர்க்க, ஆங்கிலம் பொது மொழியாக, தமிழகமல்லாத ஏனையதிராவிடப் பகுதிகளில் நம் கொள்கையைப் பரப்ப-ஆக இது போன்ற பிரச்னைகளை வற்புறுத்தி முப்பத்தி மூன்று தீர்மானங்களை நம் இரண்டாவது மாநில மாநாடு ஏகமனதாக நிறைவேற்றியது!

—இதற்குப் பின்னர் அறிஞர் அண்ணா அவர்களின் பேருரை!

ஒரு நாடு விடுதலை பெறுவதற்கு மூன்றே வழிகள்தான் இருக்கின்றன. சிறிது கொச்சை

என் விளம்பரத் திறமையால் தானே லட்சோபலட்சம மக்கள் கூடியிருக்கிறீர்கள் என்கிருர் பராங்குசம்.

மொழியில் சொல்ல வேண்டுமாஞல் ஒன்று வேட்டு முறை இரண்டாவது ஓட்டு முறை மூன்ருவது ஓட்டு முறை. வேட்டு முறையைக் கையாளுவதென்ருல் ஒரு இயக்கம் பலாத்காரத்தில் இறங்க வேண்டும். செஞ்சீனு, இந்தோசீனுபோன்ற நாடுகள் தேர்ந்தெடுத்துக் கொண்ட வழிஇதுதான். ஒட்டுமுறையின் படி செல்ல வேண்டுமாஞல் பலம் வாய்ந்த இன்னொரு கட்சியை ஒட்டிக்கொண்டு காரிய மாற்ற வேண்டும். மூன்ருவது



மாநாட்டுத் தலைவரும், வரவேற்புக் குழுத் தலைவரும்!

தான் ஓட்டுகள் பெற்று. சட்டசபை சென்று நாடு மீட்பதாகும். அந்த ஓட்டு முறையைத்தான் இப்போது நாம் மேற்கொள்ளப் போகிருேம்.

— அண்ணா பொழிந்த தேன் மாரியிலே சில துளிகள் இவை!

பிரியமுள்ள தோழனே! இமய வரைப்பினில் நம் இலச்சினையைப் பொறித்த செங்குட்டுவனுடைய தேக அமைப்பு எப்படியிருந்தது தெரியுமா? நாம் பார்த்ததில்லை; அவனைப் பார்க்கும் பேறு பெற்ற புலவர் ஒருவர் வர்ணிக்கிருர் பார்—

சிச்சிலிப் பறவை நீரினுள் தன் அலகை மட்டும் அமிழ்த்தி. பின் மேலே எடுக்கும் நிலையிலே விழுப்புண்களை தைக்கும்போது குருதியிலே மூழ்கி மேலே எழுகிற ஊசியானது பல தழும்புகளை செங்குட்டுவனின் மார்பிலே எழுப்பியிருக்கிறதாம்!

சிச்சிலிப் பறவையின் அலகு சேரன் பட்ட காயங்களைத்

திராவிட மாணவர்களுக்கான திறன்மிகு படைக்கலன் வழங்கிஞர் தில்லை வில்லாளன்.

தைக்கும் ஊசிக்கு உவமை கூறப்பட்டிருக்கிறது.

வீரத் தழும்புகளைத் தடவியவாறு இருக்கும் செங்குட்டுவனும் அவனுடைய படைஞரும் எப்படிப்பட்டவர்கள் தெரியுமா?

'அம்புசேர் உடம்பினர்
நேர்ந்தோர் அல்லது
தும்பை சூடாது மலைந்தமாட்சி'
(பதிற்றுப் பத்து)

அம்பு பட்ட விழுப்புண்களை மார்பிலே கொண்டோரைத்தான் அவர்கள் சம எதிரிகளாக நினைத்து, தும்பை சூடிப் போரிடுவராம்!

எதிரிகளாவதற்கும் தகுதி கற்பித்திருக்கின்றனர் பழந்தமிழ்ப் பாசறை வீரர்!

அத்தகைய ஈர நெஞ்சும் வீரக் கழலும் கொண்டவர்களைத்தான் தன் அணியிலே பெற்றிருக்கிறது நமது கழகம்.

"உலகைத் திருத்திய உத்தமர்" கலை மாநில மாநாட்டிற்கு அழைத்துவந்து சிறத்திஞர் அரங்கண்ணல்.

அதோ: இந்த இளைஞன் முகப்பைப் பார்.

சிச்சிலிப் பறவையின் அலகு நிகர் ஊசி புகுந்ததால் ஏற்பட்ட தியாகத் தழும்புகளைத் தடவியவாறு எழுந்து நிற்கிருன் திராவிடன். வாழ்ந்த இனம் தாழ்ந்து போனதன் காரணம் என்ன என்று கர்ஜனை புரிகிருன். தடந் தோள் தூக்கி, கைகளை இருக்கிய இரும்பு வடந்தனை சுக்கல் சுக்கலாக உடைத்தெறியும் வீறு பெற்று விட்டான!

எதிர்த்தோரையெல்லாம் எதிர்க்க மாட்டான் அந்த மாவீரன, அதற்கு அவனுக்கு நேரமுமில்லை. வெற்றிப் பாதையில் நரிகளும், ஞமலிகளும் ஊளையிடாமலிருக்குமா? எனவேதான் தொடை நடுங்கிகளை தள்ளி நில் என்று கூறிவிட்டு ஏகாதிபத்தியக் காவலரைக் கூறு செய்யக் கிளம்பி விட்டான் குனறெடுக்கும் நெடுந்தோளன!

தோழனே! அந்த அணி வகுப்பில் நீ; உன்னோடு நான்—நம்மோடு பலர்! இந்தப் பெறற்கரிய பேற்றினை உள்ளும்போது உண்மையிலேயே பூரிப்பு நம் இதயத்தைக் கொள்ளை யிடுகிறது.

இதில் சேராமல் ஒதுங்கியுமிருக்கின்றனர்; அவர்கள் சிலர்! அவர்களையும் நம் அணி வகுப்புக்கு அழைத்து வர முயற்சி செய்; முகில் கிழிக்கும் நிலவாக அவர்கள் பந்த மதி போக்கும் மாண்பு மிக்க கருத்துக்களை அள்ளி வீசு பின் எதிரிகள் நமக்குத் தூசு!

அடுத்த கடிதத்தில் உன்னைச் சந்திக்கிறேன.

உன் அன்புத்
தோழன்.

## வருந்துகிருேம்.

ஆண்டர்சன் பேட்டை தி. மு. க. செயலாளர் தோழர் கே. ஜி. சின்னராசன் தனது இருப்பிடமான காவிரிப்பாக்கத்தில் மாரடைப்பினுல் காலமாஞர் என்ற துக்கச் செய்தி கேட்டு வருந்துகிருேம்.

## கந்நாயி காலமானர்

நாதசுர உலகில் தனிச்சிறப்பு பெற்றிருந்த திருவாளர் டி என். ஆர் நடராஜசுந்தரம் (கக்காயி) அவர்கள் 18—5—56 வெள்ளிக்கிழமை மாலை 6 மணிக்கு இயற்கை எய்திய செய்தி கேட்டு வருந்துகிருேம். இவர் நாதசுர சக்கரவர்த்தி டி. என். ராஜரத்தினம் பிள்ளையின் மருமகனும், பிரதம மாணவருமாவார். இவரது பிரிவினுல் வருந்துகிற இவரது குடும்பத்தினருக்கும் நண்பர்களுக்கும் நமது ஆழ்ந்த அனுதாபம் உரியதாகுக.

# ★ 'தேர்தலு'க்குத் தேர்தல்! ★




"இந்த தேய்ந்து போனதுகள் தேர்தலில் குதிக்கப் போகின்றனராமே!"—கேலிக் குரல் ஒரு பக்கம்!

" தி. மு. கழகமா? தேர்தலுக்கா? அய்யையோ; அண்ணுசி இனி நாம் என்ன செய்வது?"—திகிலும் திகைப்பும் கலாத குரல் மற்ருெரு பக்கம்!

—கடந்த சில நாட்களாக தென்னகத்திலே இந்த இரு குரல்களும் மாறி மாறி ஒலித்திடக் கேட்கிறேம்.

பல்லாண்டுகளாக பிரச்சாரத்தோடு நின்றிருந்த நாம் பதவி பிடிக்க அல்ல; சட்டசபையையும் நாடு மீட்கும் படைக் கலன்களுள் ஒன்ருக ஆக்கிக் கொள்வதற்காக தேர்தலில் கலந்து கொள்ளப் போகிறேம்!

பாலக்காட்டிலே ஓங்கிய சுத்தியலையும், பள பளக்கும் கறுக்கரிவாளையும் தூக்கி யெறிந்து விட்டு காங்கிரசுக்கு நடை பாவாடை விரித்திருக்கிருர்களே கம்யூனிஸ்ட் கட்சியினர், அப்படிப் பட்டதல்ல திருச்சியிலே கூடியோர் தந்த தீர்ப்பு. இனி எம்மை எதிர்த்துப் பேச இத்தமிழ்த் தரணியில் யாரிருக்கிருர்கள் என்று கேட்ட ஆணவக்காரர்களுக்கு ஓட்டுகளால் ஆப்பு தரும் அருமையான முடிவு இது!

இந்த நல்ல முடிவு குறித்து மகிழ்ச்சியையும் தெரிவித்துக் கொண்டிருக்கின்றனர் சிலர். அந்தக் கூட்டத்தைச் சேர்ந்ததுதான் 'ஆனந்த விகடன்!'

சென்ற கிழமை இதழிலே 'லோக சஞ்சாரம்' என்னும் தலைப்பிலே 'விகடன்' தந்திருக்கும் விளக்கத்தை கீழே தருகிறேம்:

"பொதுத் தேர்தலில் கலந்து கொள்ளாமலே நீண்ட காலமாகக் காங்கிரசை எதிர்த்து வரும் கட்சிகள் தமிழ் நாட்டில் இரண்டு உண்டு. அவற்றில் ஒன்று திராவிட முன்னேற்றக் கட்சி. தேர்தலில் பிரவேசிப்பதென்று இப்போது அது தீர்மானித்திருப்பது தமிழ்நாட்டு அரசியலில் புதியதொரு விளைவையே உண்டாக்கியதாகவே கூறலாம்.

"சுதந்திர இந்தியாவின், அரசியல் அமைப்புப்படி தேர்தலில் கலந்து கொள்ள எல்லோருக்கும், எல்லா கட்சிகளுக்கும் உரிமை வழங்கப் பட்டிருக்கிறது. திராவிட முன்னேற்றக் கட்சி இந்த உரிமையை உபயோகிக்கக் கூடாதென்று எவ்வாறு கூற முடியும்?"

'விகடன்' கூறுகிறது; அல்ல அல்ல விகடனே கூறுகிறது, இப்படி!

ஆனல் பழமைப் பித்திற்கும், தமிழினத்தை எத்திப் பிழைப்பதற்கும் பின்வாங்காத 'சுதேச மித்திரன்' இதழோ, சுதந்திரத்துப் பரதேசிகள் நடையிலே கிண்டல் உரைகளைக் கேலிச் சித்திரத்தின் வடிவிலே வாரியிறைக்கிறது.



பொதுச் செயலாளர், மாநாட்டுத் திறப்பாளர் ஜி. பி. எஸ்., வரவேற்புக் குழுத் தலைவர் அம்பில் தர்மலிங்கம் ஆகியோர் அமர்ந்திருக்கும் காட்சி!

கதை யொன்று சொல்வார்கள்: அருமையான பந்தயக் குதிரை யொன்று—வேகத்திலும், வன்மையிலும் தன்னைவிடத் திறன் பெற்ற புகை வண்டி புதிதாக வந்திருப்பதைக் கேள்விப்பட்டதாம். "ஆகாகா! புகை வண்டியே—எனக்குப் போட்டியாகவா வந்திருக்கிருய்? முடியாது; முடியாது. என்னிடம் உன் ஜம்பம் சாயாது!" என்று பேசியவாறு ஓடும் புகை வண்டியுடன் போட்டி யிட்டு, தானும் ஓட ஆரம்பித்ததாம்.

பிறகு என்னவாகும்? வயிறு இறைக்க இறைக்க ஓடி, அந்த வாயில்லாப் பிராணி செத்து மடிந்ததாக புதுமையிடம் பழமை போட்டியிட முடியாது-என்பதை விளக்கும் ஆங்கிலக் கவிதையொன்று சொல்லும்!

அந்தக் கிழட்டுக் குதிரையைத் தான் கவனத்துக்குக் கொண்டு வருகிறது, தமிழ்ப் பத்திரிகை உலகத்திலே கிழட்டுப் பருவத்தை எய்தியிருக்கும் 'மித்திரன்' ஏடு!

நம்மிடம் தற்காலிகமாக மித்திர உறவு கொண்டிருக்கும் வேறு சிலரோ சந்தேக விளக்கம் இவ்விடமிருந்து கிளம்பிருலொழிய தெளிவு பெருதத் தன்மையைப் பெற்றிருக்கிருர்கள்.

"ஆமாம்; நீங்கள் கேட்பதோ திராவிட நாடு. ஆனல் ஆந்திரம், மலையாளம், கன்னடம் இவை யாவும் பிரிக்கப்பட்ட பிறகு உங்கள் இலட்சியத்துக்காக தமிழ் நாட்டுப் பகுதிகளில் மட்டும் தேர்தலில் போட்டியிடுவதில் என்ன பலனிருக்கிறது?"—இப்படிப் புறப்பட்டு வருகிறது கேள்விக் கணை!

அவர்களுக்கெல்லாம் அனுதாபத்தோடு தெரிவித்துக் கொள்ள வேண்டியவர்களாகிறேம்—நாம் பல மேடைகளில் சொல்லிய பதிலைத் தான் திருப்பிச் சொல்ல வேண்டியிருக்கிறது என்பதை!

கொஞ்சம் புதிதாகச் சொல்ல வேண்டுமானல் ரஷ்யாவையும், அயர் பூமியையும்தான் உதாரணத்துக்கு அழைக்கவேண்டியிருக்கிறது.

ரஷ்ய நாட்டுக் கம்யூனிஸ்ட்டுக் கட்சியின் நோக்கம் முழுப் பொதுவுடமை — அதாவது சோசலிசத்துக்கு அப்பாற்பட்ட கம்யூனிசம்!

ஆனல் துணிவுடன் இன்று ரஷ்யா ஒப்புக்கொள்கிறது நாங்கள் அடைந்திருப்பது சோஷலிசத்தைத் தான்; கம்யூனிசத்தை அடைய நாங்கள் இன்னும் வெகுதூரம் பிரயாணம் செய்யவேண்டுமென்று!

சீன நாட்டிலும் இதே நிலைமை தான்! சோஷலிசம்தான் அங்கு பூத்துக்கொண்டிருக்கிறதே தவிர, கம்யூனிச மணம் கமழ செஞ்சீனம் பல ஆண்டுகள் காத்திருக்க வேண்டும்!

இன்னெரு உதாரணம் அயர் பூமி!

விடுதலைபெற்ற அயர் நாட்டோடு அல்ஸ்டர் என்னும் மாகாணம் சேர்க்கப்படவில்லை. அதாவது திராவிட நாட்டைக் கொடுத்துவிட்டு தஞ்சை மாவட்டத்தை மட்டும் டெல்லி தன்னுடைய ஆதிக்கத்தில் வைத்துக் கொண்டால் எப்படியிருக்குமோ அப்படிச் செய்துவிட்டது ஆங்கில ஏகாதிபத்தியம், அங்கே!

ஆனல் அயர் நாட்டுக்கு அரசியல் சட்டம் அமைத்தவர்கள் வாளாவிருக்க வில்லை. இன்றில்லாவிட்டால் நாளை — நாளை இல்லையேல் நாளை மறுநாள் அல்ஸ்டர் நம்மோடு சேரத்தான் போகிறது—என்ற திட நம்பிக்கையில், அதற்கும் சேர்த்து அரசியல் சட்டம் தயாரித்துக்கொண்டார்கள்!

இந்த இரு உதாரணங்களையும் இப்போது திருப்பிச் சொல்லிப் பார்ப்போம்.

பேராசிரியர் அன்பழகன் "இலக்கியத்திலே அரசியல் கருத்து"க்களை அள்ளித் தருகிருர்.

"மறைந்த மாவீரர்க"ளைப் பற்றி விவரித்து புதிய வீரர்களைத் தயாரிக்கிருர் என். வி. என்.



# மாநாட்டில் கலைவிருந்து



(1) கலைவாணர் என். எஸ். கே. 'புத்தர் வரலாறு' என்னும் கருத்து விருந்து வழங்குகிறார். (2) நாயன இசை வழங்கும் திருவாவடுதுறை டி. என். ராஜரத்தினம். (3) நடிப்பிசைப் புலவர் கே. ஆர். ராமசாமி இசை மழை பொழிகிறார். (4) இசையரசு ஹனிபா பாடுகிறார். (5) இசைக் குயில் பி. எஸ். செல்வா (6) இசைச் செல்வி ஜி. கஸ்தூரி தேமதுரப் பாவால் பந்தலை நிரப்பினார்.

★ ○ ★

எப்படி ரஷ்யாவும், சீனாவும் சோஷலிசத்தின் வழி சம்பூனிசத்தை அடையப் போகின்றனவோ அவ்வாறே தமிழ் நாட்டைப் பிரிவினைக்குத் தயார் செய்து கொண்டு ஏனைய பகுதிகளான ஆந்திர, கேரள, கர்நாடகப் பகுதிகளை நாம் பிறகு நெருங்கலாம்!

அது போலவே, எவ்வாறு தனித்து நிற்கும் அல்ஸ்டர் மாகாணம் எப்படியும் ஒரு நாள் இணைந்து விடும், இணைந்துதான் தீரும், என்ற நம்பிக்கையில் அயர் பூமி அதற்கும் சேர்த்து சட்டத்தை உண்டு பண்ணிக் கொண்டிருக்கிறதோ, அதே போலவே தமிழகத்தை மட்டும் முதலில் பக்குவப் படுத்திக் கொண்டு பிற திராவிட மொழிப் பிரதேசங்களை அணுகுவதற்கும் நமக்கு வாய்ப்பிருக்கிறது!

ஆனால் திருச்சி மாநாடு இந்த வாதத்திற்கும் இடம் வைக்கவில்லை!

**ஆந்திரம், கர்நாடகம், கேரளம் ஆகிய பகுதிகளில் கிளைக் கழகங்களைத் தோற்றுவிக்கவும்,**

குணம் கொண்டவராம் அந்தக் குத்துச் சண்டை வீரர்— பாவம் அந்த சூராதிசூரர்தான் சென்ற நகர சபைத் தேர்தலிலே எழுபத்தைந்து சத வீதத்துக்கு மேற்பட்ட வார்டுகளிலே வெற்றி காண முடியாமற் போயிருக்கிறது!

தி. மு. கழகம் அணுவைப் போன்ற தோற்றம் கொண்டதாம்! குள்ள உருவமாம்! ஆனால் இந்தக் குள்ள உருவம்தான் 'நான்சென்ஸ்' என்று சத்திய நேரு துரையின் வாயைக் கிழித்திருக்கிறது!

தி. மு. க. காங்கிரசுக்கு முன்னே சின்னஞ்சிறு புழுவை நிகர்த்ததாம்! ஆனால் இந்தப் புழுதான் புவனம் போற்றுகிற ஆச்சாரியாரை ஆழக் குழி தோண்டி புதைத்திருக்கிறது.

—இந்த பேதத்தை உணர மாட்டாத நிலையிலே சித்திரம் தீட்டியிருக்கும், 'சுதேசமித்திர'னுடைய நிலை பரிதாபத்திற்குரியதுதான்!

உதாரணத்துக்காக வேண்டுமானால் ஒன்று கூறுவோம்; காங்கிரசுக்கு முன்னால் தி. மு. கழகம் சின்

★

''உலக அமைதி''க்கான உகந்த வழி என்னவென்று உணர்ச்சியிகு உரை தருகிறார்

தோழர் ப. உ. சண்முகம்



★

கழகக் கருத்துக்களைப் பரப்புவதற்கும் பொதுச் செயலாளர் குழு ஒன்றை நிறுவி, ஐயாயிரம் ரூபாய்கள் வரை செலவிடவும் தீர்மானம் நிறைவேற்றி யிருக்கிறது!

அவ்வளவு ஏன்; வருகிற தேர்தலுக்கு அடுத்த பொதுத் தேர்தலில் நமதியக்கத்தின் சார்பாக அந்தப் பிராந்தியங்களில் அபேட்சகர்கள் தோன்றினாலும் நாம் ஆச்சரியப்படுவதற்கில்லை!

—நிலைமைகள் இவ்வாறு உருவாகிக் கொண்டிருக்கும்போதுதான் 'மித்திரன்' சித்திரக்காரரைத் தூண்டி விட்டு கேலி பேசுகிறது!

மலை நிகர்த்த பயில்வான் ஒருவர் 'கசரத்' கொடுத்த தேக பலத்துடன் நின்று கொண்டிருக்கிறார் — அவர்தான் காங்கிரசாம்!

அவருக்குப் பக்கத்திலே எலி போன்ற ஒரு குட்டிப் பயில்வான் அந்த மலையை எதிர்க்கத் தயாராகிறாராம்–அந்தச் சிறு முயல் போன்றவர்தான் திராவிட முன்னேற்றக் கழகமாம்!

இமயமலை போன்றவராம் காங்கிரஸ் பயில்வான்! அவர் தான் பக்தவத்சலங்கள், குமாரசாமிராஜாக்கள் வடிவத்திலே சென்ற பொதுத் தேர்தல் நேரத்தில் மண்ணைக் கவ்வியிருக்கிறார்!

எதிரிகளை எறும்புகளைப்போல நினைத்து மிதித்து நசுக்கிவிடும்

னஞ்சிறிய உருவமாகத்தான் இருக்கட்டுமே—

**மலையைப் பிளந்தெறியும் சிற்றுளி—**

**பெரும் பெரும் கண்ணாடிக் கோட்டைகளை அறுத்தெறியும் சின்னஞ்சிறு வைர அணு!**

—இவைகளைப் பற்றி கேள்விப் பட்டதில்லையா 'மித்திரன்' ஆசிரியர்!

**அதி வேகமாய் ஓடப் பழகியிருக்கும் முயலை வென்ற ஆமை—**

**காட்டரசன் சிங்கத்தைக் காப்பாற்றிய சுண்டெலி—**

—இந்தக் கதைகளை பால வயதிலாவது 'மித்திரன்' கூட்டம் படித்திருக்க வேண்டுமே!

தேர்தலைப் புறநானூற்றுக் காலத்துப் போர்க்களமென்று நினைத்து, 'வெற்றி அல்லது வீர மரணம்' என்பதை மட்டுமே இலட்சியமாகக் கொண்டதல்ல தி. மு. கழகம், ஜனநாயகமும் அந்த வழிதான் சிறந்தது என்றும் வாதிடவில்லை!

தேர்தலில் வெற்றி கிடைக்கலாம்; ஆனால் தோல்வியே பல சமயங்களில் வெற்றிக்குப் படிக்கட்டுகள் அமைப்பதுமுண்டு!

—'மித்திரன்' ஏடு அரசியல் அரிச்சுவடியான இந்தக் கருத்தினை நினைவு படுத்திக் கொள்ள வேண்டுமென்று மீண்டும் மீண்டும் வற்புறுத்த விரும்புகிறோம்!

**மாறன் எம். ஏ.**

ஜோனுக்கு வயது பத்து தான்; ஆனால் முப்பது வயது மனிதனுக்கும் இல்லாத எண்ணங்கள், கவலை, பொறுப்பு — அவனுக்கு உண்டு. ஆமாம்; அவனைக் கவலையின்றி வாழவைக்கவில்லை, அவனது அப்பா. அவர்தான் என்ன செய்வார்? பணக்காரர்களுக்கு வர வேண்டிய மாரடைப்பு தனக்கும் வருமென்று கண்டார்? ஒரு நாள் திடீரென்று அவர் இறந்து போய் விட்டார். அப்போதுதான் திடீரென்று தனக்குக் குடும்ப பொறுப்பு வந்து விட்டதை உணர்ந்தான், ஜோன்.

அம்மாவோ மிகவும் உடல் மெலிந்தவள். அவளால் எந்த வேலையும் செய்ய முடியாது. ஜோன் குடும்பத் தலைவனானன்.

வேலைக்கு அலைந்தான்; ஊர் சுற்றினான்; பல படிகளை ஏறி இறங்கினான். 'பாவம்' என்று இரக்கம் காட்ட எந்தப் 'பாவி'யும் துணியவில்லை. சோர்ந்த முகத்தோடு வீடு திரும்புவான். வீடென்றா சொன்னேன்? தவறு; தவறு! குடிசை—குப்பை மேட்டுக்கு அருகிலே, சாக்கடை ஓரத்திலே செத்துக் கொண்டிருந்த ஓட்டைக் குடிசை! என்ன செய்வது? அது தானே அவர்களுக்கு மாளிகை!

வேலை தேடி மிகவும் களைத்து வீடு திரும்புவான் ஜோன். அம்மா ஆறுதல் சொல்வாள். ஆனால் வயிற்றைக் கிள்ளும் பசியை 'தூரப் போ' என்று சொல்ல யாரால் முடியும்? "கவலைப்படாதே ஜோன்! உழைக்க வழி தேடு; நாயினும் கீழாக உழைக்கலாம்; ஆனால் கை நீட்டி யாசகம் கேட்காதே மகனே!" என்பாள் அம்மா. அவள் மானத்தில் பற்றுதல் கொண்டவள். மாற்றாரிடம் கெஞ்சி, உழைக்காமல் ஊதியம் பெறுவதை அவமானமாகக் கருதினாள். எனவேதான் "பிச்சை எடுக்காதே, செல்வமே!" என்று போதித்தாள்.

இக்நிலை வளர்ந்தது. வறுமை வதை செய்தது; தாய் துடித்தாள். அதைக்கண்டு ஜோன் தவித்தான். ஆனால் பரந்த உலகமோ பாடுபடத் துடிக்கும் அவனைப் பார்த்து பல்லிளித்து சிரித்தது! அவனது தாயோ அப்போதும் சொல்லுகிறாள், "பிச்சை எடுக்காதே மகனே!" என்று!

அவன் ஓடினான். வறுமையை விரட்ட—கொல்லும் பசியைத் துரத்த வழி தேடி ஓடினான்.

★

அன்று மாலை வீட்டிற்குள் வேக வேகமாக நுழைந்தான் ஜோன்.

அவனைப் பார்த்த அம்மா திடுக்கிட்டாள். மகனின் முகத்தில் மகிழ்ச்சியின் ரேகைகள் எப்படி வந்தன?

"அம்மா! எனக்கு வேலைகிடைத்து விட்டதம்மா! இதோ பாரம்மா, கூலி!" என்றான் ஜோன்.

அவன் கையிலே புதைந்து கிடந்த நாணயங்களைக் கண்ட அம்மாவின் முகத்திலும் மகிழ்ச்சி படர்ந்தது. நீண்ட நாட்களுக்குப் பிறகு அவள் சிரித்தாள். "மகனே! பார்த்தாயா? நான் அடிக்கடி சொல்வேனே, உழைப்புக்கு என்றும் பலனுண்டு. தெரிகிறதா?" என்றாள் அவள்.

நாட்கள் ஓடின. ஜோன் விடிந்ததும் வெளியே செல்வான். 'மகன் வேலைக்குப் போகிறானே' என்று அவன் மறையும்வரை வாசலில் நின்று வழியனுப்பி வருவாள் அம்மா. மாலை வந்ததும் மகன் வருவான்; அன்றைய கூலியும் வரும். இருவரும் ஏதேனும் சமைத்து உண்பார்கள். அம்மா தன் அன்பு மகனுக்குஏதேதோ புத்திமதிகள் சொல்லுவாள். இடையிடையே "பிச்சை எடுப்பது கேவலம்" என்றும் சொல்லத் தவறமாட்டாள். அப்போதெல்லாம் ஜோனின் முகம் சிறிது மாறுதலடையும். "ஆமாம்மா! உண்மைதான்!" என்று ஏதேனும் சொல்லி மழுப்பி விடுவான்.

ஒரு நாள்...மாலை மங்கி இருள் சூழ்ந்து கொண்டு வந்தது. ஜோன் வீட்டுக்கு வரவில்லை. வழக்கத்திற்கு மாறான செயல்—அம்மா தவித்தாள். என்ன ஆயிற்றோ, ஏதாயிற்றோ என்ற நினைவுடன் வெளியே வந்தாள். மகனைத் தேடிக் கொண்டு நடக்க ஆரம்பித்தாள். ஜோன் முன்பே அவளிடம் சொல்லியிருக்கிறான், தான வேலை செய்யும் இடம் ஊர்க்கோடியில் இருப்பதாக. ஆகவே அம்மா ஊர்க்கோடியை நோக்கி நடந்தாள். ஆனால் அந்த இடத்திலே அலுவலகம் எதையும் காணோம். பிரயாணிகள் தங்குமிடம் ஒன்றுதான் இருந்தது. அவள் ஜோனைத் தேடினாள். ஜோன் கிடைத்தான். அலுவலகப் பணியாளனாக அல்ல; பிச்சை எடுக்கும் பரிதாபக் கோலத்தினனாக! அவள் மனம் என்ன பாடுபட்டிருக்கும்? "பிச்சை எடுக்காதே! பிச்சை எடுக்காதே!" என்று படித்துப் படித்துச் சொல்லி என்ன பலன்? "ஐயா! ஐயா!" என்று அடிவயிற்றிலிருந்து குரலெழுப்புகிறான்; கெஞ்சுகிறான்; தாள் பணிகிறான்; "நாயே! நாடோடியே!" என்று தூற்றுகிறார்கள் பணம் படைத்தவர்கள்; உதைக்கவும் செய்கிறார்கள். சில திமிர் படைத்தவர்கள். அம்மாவின் மனம் துடி துடித்தது. அவ்விடத்தை விட்டு ஓடினாள்.

★

வாசலிலேயே நின்று கொண்டிருந்தாள் அம்மா. ஜோன் அவளைப் பார்த்தான். தன்னையே வெறிக்கப் பார்த்துக் கொண்டிருக்கும் அவளது கண்களிலே ஏன் அத்தனை செந்நிறம்?—கோபம்? அவன் பயந்தான். "அம்மா! இன்னைக்கு கொஞ்சம் நேரமாயிட்டம்மா! முதலாளி வெளியே போயிருந்தார். அவர் வந்துதான் கூலி கொடுத்தார். கோபமா, அம்மா?" என்றான்.

அவ்வளவுதான்; அம்மா வெறி பிடித்தவள் போல் அவன் மேல் பாய்ந்தாள். தாயன்பு எங்கேயோ ஓடி ஒளிந்தது. மகன் மானத்தை மறந்து பிச்சை கேட்கிறான் என்று நினைத்து விட்டாள் அவள். அவன் கன்னத்தில் 'பளார், பளார்' என்று அறைந்தாள். "முதலாளியாம்; கூலியாம்! ஏனடா பொய் சொல்லுகிறாய்? பிச்சை எடுக்காதே என்று எத்தனை முறை அலறினேன். மானம் போச்சேடா!" என்று கத்தினாள்; வெளியே தள்ளினாள்.

"ஐயோ, அம்மா!" என்று அலறிக் கொண்டு நடுத்தெருவில் விழுந்தான் ஜோன்.

தட்டுத் தடுமாறி எழுந்திருக்க முயன்றபோது அவன் கைகளுக்கருகில் இரு 'பூட்ஸ்' அணிந்த பாதங்கள் தென்பட்டன. ஜோன் நிமிர்ந்து பார்த்தான். ஒரு பெரிய மனிதர்—இந்தக் கொடுமையைப் பார்க்கச் சகிக்காதவர்போல் நின்று கொண்டிருந்தார்.

"வேலை கிடைக்காததால் தான் அம்மா பிச்சை எடுத்தேன். என்னை மன்னித்து விடுங்களம்மா!" என்று விம்மிக் கொண்டே எழுந்தான். அந்த மனிதர் அவனைத் தூக்கினார். அவர் நடந்ததை—நடக்கக் காரணமாக இருந்ததை உணர்ந்து கொண்டார். இரக்கப் பட்டார், விசித்திரமான மனிதர்! நண்பன் ஒருவனின் ஆலை யொன்றில் எப்படியும் வேலை வாங்கித் தருவதாகச் சொன்னார். ஜோன் வியந்தான். அவரை வியப்புடன் பார்த்தான்; அம்மா நன்றியுடன் நோக்கினாள். ஜோனை வாரி அணைத்துக் கொண்டாள்.

அந்த மனிதருக்கோ அவர்கள் இருவரும் விசித்திரமாகத் தோன்றினார்கள். ஜோனை அழைத்துக் கொண்டு புறப்பட்டார்.

★

ஜோன் இப்போது ஆலைக் கூலி! இயந்திரங்களுக்கிடையே இயந்திரமாக உழைத்தான். மிகவும் சிரமம் தான். எனினும் என்ன; தன் மகன் பிச்சை எடுக்கவில்லை என்பதில் அன்னைக்கு மகிழ்ச்சி!

ஆனாலும் அந்த மகிழ்ச்சி நீடிக்கவில்லை. ஒரு நாள்......

வழக்கமாக மாலையிலேயே திரும்பி வரும் மகனை, இருட்டும் வரைகாணவில்லை. அம்மாவுக்கு எதுவும் புரியவில்லை. வீட்டு வாசலிலேயே காத்துக் கிடந்தாள்.

நன்றாக இருட்டி விட்டது. அம்மா தவித்தாள். அப்போது குடிசை வாசலில் ஆலையைச் சேர்ந்த 'கார்' ஒன்று வந்து நின்றது. அம்மாவுக்கு இனம் தெரியாத படபடப்பு. காருக்குள்ளிருந்து ஜோனைத் தூக்கிக் கொண்டு வந்தார்கள் சிலர். அம்மா பதறினாள். "ஜோன்!" என்று கதறினாள்.

குடிசைக்குள் கிடத்தினார்கள் ஜோனை! அம்மா பாய்ந்தாள். "என்ன? என்ன?" என்று கத்தினாள்.

"அம்மா! ஜோன் தவறிப்போய் இயந்திரத்தில் சிக்கிக் கொண்டான். இயந்திரத்திற்கு ஏதம்மா இருதயம்? உங்கள் அன்பு மகனின் கால்களை......"

அவர்கள் முடிக்கவில்லை. அம்மா ஜோனின் கால்களைப் பார்த்தாள்! அங்கே கால்கள்இல்லை! "ஐயோ!" என்று அலறிக் கொண்டு மகனின் மேல் விழுந்தாள் அவள். புரண்டாள்; உருண்டாள்; அழுதாள்!

அவளது கதறலைக் கவனியாது கார் பறந்து விட்டது; ஜோனும் மயங்கிக் கிடந்தான்!

★

ஊர்க்கோடியிலிருந்த பிரயாணிகள் தங்குமிடத்திலிருந்து "ஐயா! இரண்டு கால்களுமற்ற முடவனய்யா! கண் திறந்து பாருங்க எய்யா!" என்று பிச்சை எடுத்துக் கொண்டிருக்கிறான் ஒரு சிறுவன்; அவனுக்குப் பக்கத்திலே அவனது அம்மா சிலை போல் உட்கார்ந்திருக்கிறாள். அவர்கள் யார்? நன்றாகப் பாருங்கள். இயந்திரத்திற்குக் கால்களை 'பலி' கொடுத்த ஜோனும், "பிச்சை எடுக்காதே! பிச்சை எடுக்காதே!" என்று அறிவுரை சொன்னாளே, அந்த அம்மாவும் தான் அவர்கள்!

—சொர்ணம்


எண்ணப் படையல்! கற்பனைக் குவியல்!

கருத்தில் தெளிவுண்டாக்கும் கற்பூரப் பெட்டகம்!

'பொன்னி'யில் தொடர்ந்து வெளியான கன்னிச் சித்திரம்!

# "ஆடும் மாடும்"

எழுதியவர் :

தோழர் டி. கே. சீனிவாசன்

கதியற்ற கன்னி ஒருத்தியின் கண்ணீர்த் துளிகளிலிருந்து பிறந்த சிந்தனைச் சித்திரம்!

சேகர், சக்கு, வாசு! இந்த முக்கோணத்தைச் சதுரமாக்கிய சோமு! இவர்களிடையே எரிதழலின் இடையே இருப்பதைப் போல் வாழ்ந்த மோகனா! வீசிய புயலினிடையே சிக்கித் தவித்த இவர்களுடைய வேதனைச் சித்திரம்!

ஓவியர்கள் பாலு சகோதரர்களால் இந்தப் புத்தகத்துக்கென்றே தயாரிக்கப்பட்ட வண்ணச்சித்திரம் முகப்பை வசீகரிக்கும்!

240 பக்கங்கள் விலை ரூபாய் 2-8-0

வியாபாரிகளுக்கு தக்க கழிவுஉண்டு.

அறிவு நூல் நிலையம்,
405, பெரிய கடைவீதி, திருச்சி.

# கடைசிப் பக்கம்

## 'எழுத்தாணி'

சி. ஜானகி ; தென்காசி,

*(?) மனித மூளையின் அளவு வெளியே தெரியும்படி அமைக்கப்பட்டிருந்தால்?*

அரசியல் துறைக்கு வந்திருப்போரின் தொகை வெகுவாகக் குறைந்திருக்கும்!

*(?) உங்கள் கட்சி ஏழைகள் இயக்கமென்பதற்கு என்ன அத்தாட்சி ?*

அமிர்தசரஸ் காங்கிரஸ் மாநாடு முடிந்த பிறகு முதலிரண்டு வகுப்புப் பெட்டிகளே கொண்ட 'ஸ்பெஷல்' ரயில்கள் விடப்பட்டன. எங்கள் திருச்சி மாநாட்டிற்கு வந்தவர் அத்தனை பேரும் முழுக்க முழுக்க மூன்றும் வகுப்புப் பெட்டிகளுக்கு உரியவர்களாயிற்றே!

முத்தாய் நல்லப்பன்;
கஞ்சாங்காடு.

*(?) பம்பாய் பிரதமர் மொரார்ஜி தேசாய்க்குக் காது செவிடு என்கிறார்களே; உண்மையா?*

இருக்கலாம்; காது செவிடானவர்களுக்குத்தான மந்திரி பதவி கொடுக்கப்பட வேண்டுமென்பது காங்கிரஸ் கட்சியின் பொது விதி!

*(?) பார்ப்பனர்கள் கோவிலுக்கு வேண்டுதல் செய்துகொண்டு மொட்டை அடித்துக் கொள்வதில்லையாமே; ஏன்?*

சமையற்காரர்கள் தாங்கள் செய்ததையெல்லாம் சாப்பிடமாட்டார்களாம். அதைப் போல பிறரை 'மொட்டை' அடிப்பவர்கள் தாங்களே மொட்டை அடித்துக் கொள்வார்களா?

மாநாடு நடத்திய வாக்கெடுப்பில் பெண்களும் கலந்துகொண்டனர்.

விமலா பாண்டியன்;
அவிசா வெல்ல

*(?) மாற்றுக் கட்சியைத் தூற்றுமல் ஒரு கட்சி வளர முடியுமா?*

உமது கேள்வியே தவறு, நண்பரே! மாற்றுக் கட்சியைத் தூற்றி வளர்ந்த கட்சிகள் அரசியல் வரலாற்றிலேயே கிடையாது!

ரா. நடராசன்; சேலம்.

*(?) பகுத்தறிவுக்கும், கடவுள் பக்தர்களுக்கும் உள்ள சம்மந்தம் என்ன ?*

பக்தவத்சலனுருக்கும் தமிழ் இலக்கியத்திற்கும் உள்ள சம்மந்தம்தான!

ஏ. கே, எஸ். மணியன்; ஆரணி.

*(?) நடிகர்களுக்கு நடிப்பு சொல்லித் தரும் கல்விச் சாலை எது?*

எதுவுமில்லை; முதலமைச்சர் நேருதான் இப்போதைக்கு அந்த வேலையைப் புரிந்து வருகிறார்.

ஏ, விசுவநாதன்; உதகை.

*(?) விசயலட்சுமி பண்டிட் கதர்ப் புடவை கட்டுவதுண்டா?*

இல்லை; அப்படி கதர்ப்புடவையை அணிந்துகொண்டு பிரயாணம் செய்தால் ஆகாய விமானக்காரர்கள் புடவையின் எடைக்கு வேறு 'லக்கேஜ்' போட்டு விடுவார்களாம். அதனால்தான்!

இராஜேஸ்வரி; சேலம்.

*(?) "பெண்ணின் பெருந்தக்க யாவுள" என்று கூறிய வள்ளுவப் பெருந்தகைக்கும், 'பெண்ணுக வந்ததொரு மாயப் பிசாசம்'-என்று கூறுகிற யோகிக்கும் உள்ள வேறுபாடு என்ன?*

வள்ளுவர் கூறியது பெண்ணைப் பற்றிய திராவிடக் கருத்து. அடுத்தது அசல் ஆரியக் கொள்கை!

தி. மு. க. 2-வது மாநில மாநாட்டு முகப்புப் படங்களும் இது வரை வெளிவராத விதங்களில் அண்மையில் எடுத்த தி. மு. க. தலைவர்களின் படங்களும் கிடைக்குமிடம் :

பாண்டியன் புகைப்பட நிலையம்,
திருச்சிராப்பள்ளி.

### முக்கிய அறிவிப்பு

இந்த இதழ் மாநாட்டுச் சிறப்பிதழாக அதிகப் பக்கங்களுடன் வருகிற காரணத்தால் அடுத்தவாரம் (1—6—56) முரசொலி இதழ் வெளிவராது ஒலி 9, 8-6-56 அன்று எல்லாச் சிறப்புகளுடனும் வெளிவரும்.

### வாழ்த்துகிறோம்

★

புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன் அவர்களின் தமையனார் எம். ஜி. சக்ரபாணி அவர்களின் மகள் சத்யபாமாவுக்கும் திரு. ஏ. இராசனுக்கும் 23-5-56 அன்று மாலை 4 மணியளவில் சென்னை இராயப்பேட்டையில் அறிஞர் அண்ணா தலைமையில் சிறப்புற திருமணவிழா நடைபெற்றது. புது மணத்தினை வரவேற்றும், மணமக்களைப் பாராட்டியும், கலைவாணர் என். எஸ். கே. பேராசிரியர் அன்பழகன், மு. கருணாநிதி, கே ஏ. மதியழகன் என். வி. நடராசன், சுந்தரம் முதலியோர் பேசினர். திரையுலக பிரமுகர்களும், நடிக நட்சத்திரங்களும் கலந்து கொண்டனர்.

இந்த இதழில் வெளி வந்துள்ள புகைப்படங்களை எடுத்தவர்கள் :

பொன்னையா ஸ்டுடியோஸ்,
திருச்சி.

மாநாட்டின் வெற்றிக்கு உழைத்த செயலாளர்களுள் ஒருவர் — மதுரைத் தோழர் முத்து!

### வருந்துகிறோம்

★

பிரபல தமிழ் சினிமா நட்சத்திரமான எம். ஆர் சந்தான லட்சுமி அவர்கள் 25-5-56 அன்று மதுரை அருகே ஏற்பட்ட கார் விபத்தின் காரணமாக இறந்துவிட்டார் என்ற துக்ககரமான செய்தி கேட்டு பெரிதும் வருந்துகிறோம்.

தமிழ்த் திரைப்பட உலகில் தனக்கென ஒரு நிலையான புகழிடம் பெற்றிருந்த அவர்—அண்மையில் திருச்சியில் நடைபெற்ற நமதியக்க மாநில மாநாட்டின் நான்கு நாள் நிகழ்ச்சிகளிலும் கலந்து கொண்டது குறிப்பிடத் தக்கது. அன்னாரை இழந்து தவிக்கும் அவரது குடும்பத்தாருக்கும், நண்பர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபம் உரியதாகுக.


## மிகச் சிறந்த கவிதைத் தொகுப்பு

### வாணிதாசன் கவிதைகள்

கவிஞர் வாணிதாசன் காண்பதைப் படமாகப் பிடித்து இதுவே கலை என்பவரல்லர். இவர்தம் கவிதைக் கண்களால் உள் விழியால் யாவற்றையும் காண்கிறார். இவர் பார்ப்பது யாவும் உள்ளத்தில் வலையில் உணர்ச்சியுடன் கலந்து உருமாறுதல் அடைந்ததையே தம் தீஞ்சொற்களால் புனைந்து கவிதைகளாகத் தருகிறார். —சுதேசமித்திரன்

நல்ல கவிதைக்கு வேண்டிய எல்லாப் பண்புகளையும் பெற்று விளங்கும் தன் பாடல்களின் வாயிலாக இவ்வாசிரியர் தன் பரந்த அறிவையும் விரிந்த அனுபவத்தையும், ஆழ்ந்த உணர்வையும் படிப்பவர் இதயம் எளிதில் உணருமாறு செய்துள்ளார். —ஆல் இந்திய ரேடியோ.

இவ்வாறு சுதேச மித்திரனாலும் ஆல் இந்தியா ரேடியோவிலும் புகழப்பெற்ற கவிஞரின் புதிய கவிதைத் தொகுப்பு.

விலை ரூபாய் 2-8-0

**மலர் நிலையம்**

133, பிராட்வே :: சென்னை-1.

## விற்பனையாகிறது!

தென்னகத்து மேடை தோறும் வெற்றிமுரசு கொட்டி வரும்,

★ மு. கருணாநிதி தீட்டிய ★

# : மணிமகுடம் :

[நாடகம்]

கருத்து நிறை தொகுப்பு! கண்கவர் முகப்பு!!

*164 பக்கங்கள் விலை ரூபாய் 1—12—0.*

விபரங்கட்கு : முத்துவேல் பதிப்பகம்,
77, மதுரை ரோடு, திருச்சி.


ஆசிரியரும், அச்சிடுபவரும், வெளியிடுபவரும் மு. கருணாநிதி, 'முரசொலி' அச்சகம், 4/128, மவுண்ட் ரோடு, சென்னை-2